பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
295, லிங்க செட்டி தெரு, மதராஸ்

வருஷ சந்தா ரூ. 4

மாலை 4 | ஞாயிறு 28-7-40 விக்ரம ௵ ஆடி ௴ 13௳ | முத்து 12

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்.
ஸௌந்தர்ய லஹரி	... ... ஸ்ரீ எஸ். வாஞ்சிநாதன்	298
போகிற போக்கில்	... ...	300
கல்வி முன்னும் பின்னும்	... ...	303
தெய்வக் காட்சி	... ... வே. நாராயணன் எம். ஏ., எம். எல்.,	305
பக்தி	... ... ஸ்ரீ ராம்	307
மனோநிலை	... ... கா. சி. வேங்கடரமணி	310
அதீத காயகல்பம்	டி. எஸ். ராமானுஜம் எம். ஏ., எல். எல். பி. (லண்டன்)	311
தபால்காரன்	... ய. மகாலிங்க சாஸ்திரி எம். ஏ., பி. எல்.,	315
கடனும் அறனும்	... ... ஆர். பங்காரு ஸ்வாமி பி. ஏ., பி. எல்.,	320
அன்பு	... ... கு. ப. வெங்கடாசலம்	321
குடும்பத் தலைவி	... ... "ரஸிகன்"	322
ஜகத்குரு	... ... கா. சி. வேங்கடரமணி	326
வைதீகத்தில் சிக்கனம்	... ... "குகப்பிரியை"	332
கண்ணன்	... ... "பந்துலு"	337
பிரிதிவியின் கண்ணீர்	... ... ஏ. முகம்மது ரஷீத்	338
சிறுவர் பகுதி	... ... சி. சங்கரன்	343

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



*ஸௌந்தர்ய லஹரி

[ஸ்ரீ எஸ்: வாஞ்சிநாதன் முடிகொண்டான்]

प्रदीप ज्वलाभिर्दिवस-
करनीराजन विधिः
सुधा सते श्चन्द्रो पल-
जल लवैरर्घ्य रचना।
स्वकीयैरम्भो भिस्सलिल
निधिसौहित्य करणं
त्वदीया भिर्वागिभस्तव-
जननिवाचां स्तुतिरियं॥

இது ஸௌந்தர்ய லஹரியில் உள்ள கடைசி ச்லோகம். ஸ்ரீ ஆசார்யாள் சௌந்தர்ய லகரி என்னும் ஸ்தோத்ராவளியை செய்துவிட்டு அதை ஜகன்மாதாவான அம்பிகைக்கு மேலே சொன்ன ச்லோகத்தால் அர்ப்பணம் செய்தார்கள். "வாக்கை உண்டுபண்ணின தாயே! உன்னுடையதான இந்த வாக்குகளால் உன்னை ஸ்தோத்திரம் செய்வது விளக்கின் ஜ்வாலையால் சூரியனுக்கு நீராஜனம் செய்வது போலவும், சந்திரனுக்கு அவனுடைய கிரணங்களின் ஸ்பர்சத்தால் உண்டாகும் சந்திரகாந்தக்கல்திவலைகளால் அர்க்யம் கொடுப்பது போலவும், ஸமுத்திரத்திற்கு அதன் ஜலங்களாலேயே திருப்தி செய்வது போலவும் இருக்கிறது." வாக்குகளை உண்டுபண்ணினவள் என்று சொல்லி இருப்பதால் வாக்குகள் தேவிக்குச் சொந்தமானவை என்று ஏற்படுகிறது. அவளுடைய வார்த்தையையே அவளுக்கு அர்ப்பணம் செய்வது கோவிலுக்குச் சொந்தமான தேங்காயைக் கோவிலில் ஸ்வாமிக்கு உடைப்பது போலாகும். இது எப்படி உசிதமாகும் என்னும் சந்தேகம் உண்டாகிறது. உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும் பகவானுடையது தானே; அவற்றை நாம் அவருக்கு அர்ப்பணம் செய்யவில்லையா? அவைபோல் இந்த வாக்கையும் அர்ப்பணம் செய்வது உசிதம் தான் என்று ஸமாதானம் சொல்லலாம்.

सरस्वत्या लक्ष्म्या विधिहर सपत्नो विहरते
रतेः पातिव्रत्यं शिथिलयति रम्येण वपुषा
चिरञ्जीवन्नेव क्षपित पशुपाशव्यतिकरः
परानन्दाभिख्यं रसयति रसं त्वद्भजनवान्

இந்த ச்லோகம் மேலே சொல்லப்பட்ட ச்லோகத்திற்கு முந்தின ச்லோகம்.

ஈச்வரனுக்கு நாம் எல்லோரும் பசுக்கள். நம்மை எல்லாம், பசுபதி, அதாவது ஈச்வரன், தாவணியில் மாடுகளைப் போல் கட்டிவைத்திருக்கிறார். அவர்தான் நம்மை கட்டிலிருந்து விடுவிக்க வேண்டும். அவரைத் தவிரக் கட்டுபடாதவர் வேறு ஒருவரும் இல்லை. ஆகையால் அவரே நம்மை விடுவிக்கவேண்டும். "இந்த மாதிரி எல்லோரையும் கட்டலாமா? அநாவசியமாய் ஒருவருக்கு ஒரு ச்ரமத்தைக் கொடுப்பது நியாயமா?" என்றால், நாம் மாட்டை இரவில் கட்டிவைக்கிறோம். ஏன்? அது நம் கொல்லையை விட்டு, இதர இடங்களுக்குப் போய் இதர மாடுகளை உபத்திரவம் பண்ணுமலிருப்பதற்கும் இந்த மாட்டுக்கு இதர மாடுகளாலும், அதன் சொந்தக்காரர்களாலும் உபத்திரவம் நேராமலிருப்பதற்குந்தான். அது போல் நம்மால் இதரர்களுக்கு உபத்திரவம் உண்டாகாமலிருப்ப

*முடிகொண்டான் கிராமத்தில் 11-7-40உ ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசார்யாள் அவர்கள் செய்த உபன்யாஸத்தின் ஸாராம்சம்.

தற்கும், நமக்கு இதரர்களால் உபத்திரவம் உண்டாகாமலிருப்பதற்குந்தான் பகவான் கருணையினுல் நம்மைக் கட்டிவைத்திருக்கிறுர்.

நம்மால் ஏன் மற்றவர்களுக்கு உபத்திரவம் உண்டாகிறது? நாம் ஒரு மாம்ஸ பிண்டத்தையே நாமாக நினைக்கிறோம். ஒரு குருவி தன்னுடைய சரீரமாகிய ஒரு சிறிய மாம்ஸ பிண்டத்தையே தானுக நினைக்கிறது. யானை இன்னும் பெரியதான ஒரு மாம்ஸ பிண்டத்தைத் தானுக நினைக்கிறது. இப்படி ஒவ்வொருவரும் நினைப்பதால் ஒருவருக்கொருவர் விரோதம் உண்டாகிறது. இதற்குக் காரணமான அக்ஞானம்,தேவியின் கிருபையால் நிவர்த்தியாகி எல்லாவற்றையுமே நாமாகப் பாவித்து விட்டால் அப்போது ஒருவருக்கொருவர், விரோதமோ, உபத்திரவமோ, உண்டாகாது. நம்மில் ஒருவனுடைய ஆசைக்கே இந்தப்பதினன்கு உலகங்களும் போதாது. எதுவரையில் நமக்கு 'வேண்டும்' 'வேண்டும்' என்கிற ஆசை இருக்கிறதோ அதுவரை நம்மால் பிறருக்குஉபத்திரவம் உண்டு. அந்த ஆசை நிவர்த்தி அடைந்தால்தான் எல்லோரும் சுகமாய் இருக்கலாம். "நாம் கட்டுண்டு இருப்பதாய் நமக்கு தோன்றவில்லையே, சுதந்திர மாகத்தானே இருக்கிறோம்," என்றுல் நாம் எவ்வளவோ சிரமப்பட்டுச்சிலகாரியங்களைச்செய்ய நினைக்கிறோம். ஆனுல் நாம் நினைத்தபடி ஆவதில்லை. சில சமயம் அதற்கு மாறுதலாகவும் முடிகிறது. இவைகளைக்கொண்டு நாம் ஸ்வதந்த்ரமாக இல்லை, கட்டுண்டுதான் இருக்கிறோம் என்று அனுமானிக்கலாம். நமக்கு ஏற்பட்ட இந்தக்கட்டு ஜகன் மாதாவான தேவியின் அருளால்தான் நிவர்த்தி அடையவேண்டும். நம்முடைய உண்மையான தாயார் தேவிதான். மற்ற தாய்கள் எல்லாம் நச்வரம். ஆகையால் நம்மாலோ, அல்லது அவர்களாலோ, நமக்குப் பிரிவு ஏற்படுவது நிச்சயம். அதன் பலனுகத் துக்கம்தான் ஏற்படும்.

மேலே சொல்லப்பட்ட ச்லோகத்தின் முன்பாதியில், ப்ரும்மாவுக்கும், விஷ்ணுவுக்கும் பொருமை உண்டாகும்படி, ஸரஸ்வதி கடாக்ஷமும், லக்ஷ்மி கடாக்ஷமும் உண்டாகின்றன என்று ஏற்படுகிறது. முதலில் லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்பட்டால் அதனுல் அனர்த்தம்தான் உண்டாகும். ஆகையால் ஸரஸ்வதி கடாக்ஷம் முந்தி வேண்டும். இதையே உபநிஷத்தில் "புத்தியைக் கொடுத்தபிறகு தனத்தைக்கொடு" என்று சொல்லி இருக்கிறது.

நமக்கு இப்போது மோக்ஷத்தைக் கொடுக்கிறோம் என்றுல் வேண்டாம் என்போம். அதைவிட அதிகமான ஸுகம் மற்றொரு வஸ்துவில் இருப்பதாக நினைக்கிறோம். ஏனென்றுல் அக்ஞானமாகிற பாசம் நம்மை கட்டி இழுக்கிறது. தேவி நம்முடைய விருப்பப்படியே முதலில் நமக்கு ஐஹிக சுகங்களைக் கொடுத்து அதனுல் திருப்தி ஏற்படும்படி செய்து பிறகு பரமானந்தத்தைக் கொடுக்கிருள். பரமானந்தம் என்றுல் என்ன? இப்போது நாம் கண், காது, மூக்கு முதலிய இந்திரியங்களைக்கொண்டு ஒரு ஸுகத்தை அனுபவிக்கிறோம். இந்த இந்திரியங்களில் எதற்காவது ஒரு குறைவு ஏற்பட்டால் அதனுல் உண்டாகும் சுகத்தை அடைய முடியாது. இந்திரியங்களின் அபேக்ஷை இல்லாமல் அனுபவிக்கக்கூடிய, இதைக் காட்டிலும் வேறு மற்றொரு ஆனந்தம் உண்டு. அதுதான் பரமானந்தம். அதன் பெயரைத்தான் சொல்ல முடியுமே ஒழிய வேறு பிரகாரத்தால் விளக்க முடியாது. அதனுல்தான் ஆசார்யாள் "परानन्दाभिख्यं रसं" என்று பெயரை மட்டும் குறிப்பிட்டிருக்கிருர்கள். "रसो वै सः" என்றும் ச்ருதியில் "பரமானந்தம் தான்" "ப்ரும்மானந்தம்" என்று சொல்லி இருக்கிறது. இந்திரியங்கள் வழியாக உண்டாகும் ஆனந்தத்தைவிட, இந்திரியங்களின் வழியாக உண்டாகாத ஆனந்தம் பெரியதா, என்றுல் ஒருவனுக்கு ஒரு பழம் கிடைக்கிறது; அவன் அதை தான் சாப்பிடாமல் தன் குழந்தைக்கு கொடுக்கிறுன். அவன் தன் குழந்தை பழம் சாப்பிடுவதை கண்டு தான் பழம் சாப்பிட்டால் எவ்வளவு ஆனந்தத்தை அடைவானே அதைக் காட்டிலும் அதிகமான ஆனந்தத்தை அடைகிறுன். இந்த ஆனந்தம் அனுபவத்தால் அறியக்கூடியது.

போகிற போக்கில்

நண்பர்களே, இரண்டு மாத காலமாய் 'போகிற போக்கில்' காணவில்லையே என்று வருத்தப்பட வேண்டாம். பொறி அணைந்து போகவில்லை. ஆனால் விறகுக்கு கஷ்டம் ஏற்பட்டு விட்டது. மலைக்கும், காட்டுக்கும் போய் கொஞ்சம் விறகு வெட்டிக்கொண்டு வருவோம் என்று சென்றேன். ஒரு வருஷத்திற்கு வேண்டிய சேகரம் செய்து அடுக்கிவைத்துக் கொண் டிருக்கிறேன். இனிமேல் விறகின் கவலையில்லை—மழை நாளிலும் கூட. உலையில்போட அரிசிதான் வேண்டும்!

* * *

நான் விரும்பாமலே, எதிர்பார்க்காமலே எனக்குச் சென்ற மூன்று மாதமாய், வலுத்த சுற்றுப்பிரயாணம் ஏற்பட்டு விட்டது. ஆனால் இந்தத் தடவை வாகனம்—'வாரன் ஹேஸ்டிங்ஸ்' நாமம் தரித்த எம். கிளாஸ் இஞ்சின் கோத்த ரயில் பிரயாணம் இல்லை. கட்டை வண்டி பிரயாணம், ஒற்றை மாட்டு வண்டி, வில் வண்டி (சில சமயங்களில் மேற்கத்திய மாடு பூட்டியது), மாயவரம் ஜட்காவண்டி பிரயாணம்—இதை ஒரு தடவை அநுபவித்தவர்களுக்கு மறுபிறப்பே கிடையாதென்று மாயவரம் ஸ்தல புராணத்திலிருக்கிறதென்று உறுதியாய், என் ரயில் நண்பர் சிரோமணி சாஸ்திரிகள் பல தடவை எனக்குச் சொல்லி யிருக்கிறார்; கடைசியாக இவைகள்கூடக் கிடைக்காவிட்டால் பாதசாரிதான். ஹைகோர்ட்டை வீணாகச் சுத்திய கால்களுக்கு, வயல் வரப்பில் நடக்கும் பொழுதுதான் மோக்ஷம்.

* * *

பல கிராமங்கள், குக்கிராமங்கள் போய், நமது கிராம வாழ்க்கையின் உண்மையை அறியலா மென்று சென்றேன். இரண்டு தாலுக்காவை கைவசப்படுத்திக் கொண்டேன்—மாயவரம், சீர்காழி, முதலிய பல கிராமங்களுக்குப் போனேன். தங்கினேன், துக்கித்தேன். காவேரியின் கண் கொள்ளாக் காட்சியையும், செழிப்பையும், செல்வத்தையும், மனிதனின் கட்டுக்கு அடங்காத ஆபாஸத்தையும், அயோக்கியத்தனத்தையும் சுயநலப் பாராட்டையும் பார்த்தேன், அனுபவித்தேன்.

எங்கும் ஒரே கதைதான், ஒரே காட்சிதான்—இடிந்த கோவிலும், தூர்ந்தகுளமும், பாழடைந்த வீடும்; காலை சீச்ச நடந்து, எப்படிப் புல் வரப்பில்போவோம்,சேற்றிலிறங்கி ஏரை யிழுத்து உழவோம்' என்ற கவலையில் ஆழ்ந்து நிற்கும் உழவு மாடுகளும்; பசுவா, எருதா என்று கண்டு பிடிக்க முடியாத கோக்களும், என்னை எங்கும் துரத்திக் கொண்டே வந்தன.

இவையெல்லாவற்றையும் நான் சகித்தேன். ஆனல் ஒரு காட்சியை என்னல் சகிக்க முடியவில்லை. ஆங் காங்குத் தேங்கி நின்று, வம்பளந்து சீட்டாடி, புகையிலை போட்டு, நாலா பக்கமும் துப்பி நிற்கும் சோம்பேறி மானிடக் கும்பல்களைக் கண்ணுல் பார்க்க முடியவில்லை. எப்படி நமது நாட்டுக்குச் செழிப்பும், செல்வமும், சுயேச்சையும் கிடைக்கும்? கல்வில் லாமல் சுவர் எழுப்ப முடியுமோ? ஏழு லட்சம் கிராமங்களை எப்படி முன்னேற்றம் அடையும்படிச் செய் கிறது? ஏழு லட்சம் சாட்டைகள் தான் வேண்டுமென்றும், வேறுவழி யில்லையென்னும் தீர்மானத்திற்கு வந்தேன். எனினும், ஏழு வயது முதல் எழுபது வயது வரையில், தங்கள் கையால் ஒரு மணி நேரத் திற்குக் குறையாமல், தினசரி வேலை செய்யும்படி உத்திரவு போட்டால் ஒழிய, நமது நாடு முன்னேற்றம் அடையாது. இந்த ஸ்திதியில் நாம் கிடந்தால் இன்னும் ஐந்து வருஷத்தில் அழிவு அடை வோம். தரித்திரமும், சோம்பேறித் தனமும் நமது கிராமங்களில் குடி கொண்டு விட்டன. இந்த சோம் பேறி மடத்தைச் சீர்திருத்தம் செய் யாமல், ஒருவித அரசியல், பொரு ளுதார, நாகரிக முன்னேற்றமும் நமக்குக் கிடையாது. நமது நாட் டில் முறுகலான தோசை தின்ன கை தயாராக இருக்கிறதே ஒழிய, வேறு ஒருவித வேலையும் செய்யத் தயாராயில்லை. சொல் நயத்தால் சகல சுகங்களையும் அடைய கை தயாராயிருக்கும்!

இப்படி அநாவசியமாய் சிந்தித்து வியசனத்தில் ஆழ்ந்து நின்றேன். என் மனதும் கோடை காலத்துக் குட்டையைப் போல் தேங்கி நின்றது.

* * *

இச்சமயத்தில், ஓர் மகானை தரி சிக்கும் பாக்கியம் எனக்கு நேர்ந் தது—காப்பி கிளப்பும், புகையிலைக் கடையும், 'ரைஸ் மில்லும், கோர்ட் டும், கோரைப்புல் போல் மண்டி யிருக்கும் நமது தமிழ் நாட்டில் கூட இன்னும் சில மகான்கள் இருக் கிறார்கள்; பூண்டு அற்றுப் போய் விட வில்லை.

அவர் தரிசனத்தால், என் கலங் கிய உள்ளம் தெளிந்து நின்றது— சேறு வாரப்பட்டு, ஊற்றுக் கண் சுரந்து நிற்கும் குட்டைபோல், என் உள்ளம் தெளிவடைந்து பெருக் கடைந்தது. தேங்கித் தயங்கி நின்ற மனம் தெளிவடைந்து, ஓட ஆரம் பித்தது. பாடுபட வேண்டியதுதான் நமது கடமை. பயன் என்ன வென்று திரும்பிக் கூடப் பார்க்கக் கூடாது. இதை அனுபவத்திற்கு நாம் கொண்டுவர முடியுமானல், வேறு என்ன சாதகம் நமக்கு மோக்ஷத்திற்கு வேண்டும்.

* * *

நண்பர்களே, பல குற்றம் குறை கள் பாரதமணியில் இருந்தாலும் நீங்கள் அவைகளைப் பொறுத்துக் கொண்டு, உங்கள் ஆதரவை அளிக்கும்படி கேட்டுக் கொள்கி றேன்.

அடிக்கடி விசேஷ முத்துக்கள் வெளியிடுவதால் எனக்கு ஒரு சாத கம் உண்டு. நான் கொஞ்சம் வாயை விட்டு அழுவதற்கு இடம் கொடுக்கி றது—அடுத்தாத்துக்காரன் என்னை என்ன நினைப்பான் என்ற தீர்க்க யோசனைகளும் கிடையா. வேண் டவும், வேண்டாம்.

என் திட்டத்தில் வருஷத்திற்கு 4 பாரதமணி விசேஷ முத்துக்கள் வெளியிடலாம் என்று எண்ணுகிறேன்.

1. வருஷப்பிறப்பு முத்து: அரசியல், பொருளாதார முறைகளை சோதித்து புது வருஷத்திற்கு புத்துயிரளிக்க வேண்டிய முறையில் வழிகளைத் தேடலாம்.

2. வ்யாஸ பூஜை முத்து: நமது நாகரிகத்திற்கு ஜீவதாதுவாய் விளங்கும் ஆத்ம விசாரணை சம்பந்தபட்ட விஷயங்களைச் சேர்க்கலாம்.

3. ஸரஸ்வதி பூஜை முத்து: கலைகளையும், விஞ்ஞானத்தையும், இலக்கியத்தையும், அபிவிருத்தி செய்யும் வழிகளைத் தேடலாம்.

4. பொங்கல் முத்து: உலகத்தின் க்ஷேமத்தையும், மேன்மையையும், சமாதானத்தையும், சாந்தத்தையும், போற்றும் வழிகளைத் தேடலாம்.

இந்த எண்ணங்களை பூர்த்தி செய்ய நண்பர்களின் ஆதரவை இன்னும் தேடுகிறேன். மிக்க சிரமத்துடன் பாரதமணி நடந்து வருகிறது. பத்திரிகை வர்க்கம் தென்னம் தோப்பு வைத்து வளர்ப்பது போல் குறைந்தது 5-வருஷமாவது வேண்டும்—பன்னுடையைக் கூடப் பார்க்க இடையில் ஏற்றச்சாலை ஒரு நிமிஷம் கூட கைவிடக் கூடாது.

மணி

* கல்வி முன்னும் பின்னும்

நம் புராதன இந்தியாவில் இளைஞர்கள் கல்விகற்ற விதமே சிறந்ததாகும். அக் காலத்தில் இளைஞர்கள் பள்ளிக்கூடச் சம் பளம் கொடுப்பதில்லை. குருக்களும் வித் யார்த்திகளின் கையை எதிர் பார்ப்ப தில்லை. அக்காலத்தில் குரு சிஷ்ய பாவம் என்னும் பிணைப்புக் கயிறு பலமாக இரு வரையும் இணைத்துக்கட்டியிருந்தது. சிஷ் யர்கள் அவரவர்கள் குருக்களைப் பய பக்தி யுடன், அவரவர்கள் சொல்லைத் தட்டாது, அவர்கள் முகங் கோணுமல், அவர்கள் கூறிய பொன் மொழிகளைத் துச்சமெனத் தள்ளாது அப்பாதையின் வழியே சென் றுய்ந்தார்கள். குரு சிஷ்ய முறையில் கிடைத்த வித்தை சிஷ்யர்களை மட்டுமல் லாமல் குருக்களைக்கூட புகழுடம்பெய்யச் செய்தது.

நாளாவட்டத்தில் குருகுல வாசத்தில் கொஞ்சம் மாறுதலேற்பட்டது. முறைமை யில் மாறுதலேற்பட்டாலும், கல்வி விஷ யத்தில் எவ்வித மாறுதலும் ஏற்பட வில்லை. எவனொருவன் அவனுடைய முயற்சியினாலேயே கல்விமானுகவும், பெரிய வித்வானுகவும் ஆக விரும்புகி ருனே அவனுக்குப் பொருளுதவி செய் தனர் அக்காலத்தவர். இப் பொரு ளுதவியினுல் அவர்கள் பிறருக்குக் கல்வி கற்பித்துக் கொடுக்க முடிந்தது. எக்கஷ்ட மின்றியும், சிஷ்யன் கையை எதிர்பார்க்கா மலும் இருக்க அவர்களுக்கு ஜமீந்தார்க ளும், அரசர்களும் கொடுத்த பொருளுதவி பெரிதும் பயன் பட்டது. இப் பொரு ளுதவி தவிர குருக்களுக்குச் சிஷ்யர்களால் மனமுவந்து குருகுல வாசம் முடிந்து செல்லும் பொழுது கொடுக்கும் பாத காணிக்கைகளும் பல உள. இப் பாத காணிக்கைகளால் பணக் காரர்களான குருக்கள் பலர் உளர். இம் முறையில் தாங்களாகவே முன்னுக்கு வந்தவர்களை இக்காலத்து ஆராய்ச்சிக் காரர்களுக்கு ஒப்புமைப் படுத்திக் கூறலாம். இம்முறை, வித்தியார்த்திகளை முதலிலிருந்தே கஷ் டப்பட்டு உழைத்து ஊதியம் பெற வழி காட்டிக் கொடுக்கிறது. இல்லாவிட்டால் குரு தக்ஷிணை கொடுப்பதெப்படி ?

ஆனுல் தற்காலத்திலோ கல்வி கற்கும் முறை உயர் குடும்பச் சிகரத்திலிருந்து அதள பாதாளத்தில் சிதறி விழுந்து கிடக் கிறது. இக் காலத்தில் பள்ளிக் கூடங்கள் தொழிற்சாலைப் போலவும், வாயு பகவான் விளையாடாத இடத்திலும், சூர்ய பகவான் நுழைந்து தவழாத இடத்திலும், நான்கு சுவருக்கு மத்தியில், பணங் கொடுத்துக் கல்வி வாங்கும் முறையில் நடத்தப்பட்டு வருகிறது. பணங் கொடுத்துக் கல்வி வாங்கும் முறையில் கல்வி பெற்ற சிஷ்யர் கள் அவரவர்கள் உபாத்தியாயர்களை "கிளி மூக்கு, சுண்டைக் காயன், டப்பி" என்று சுதந்திர வாஞ்சையோடு கூப்பிடுவ தில் ஆச்சர்ய மொன்று மில்லை. ஏனென் றால் இக் காலத்துக் கல்வி இந் நடையைத் தான் போதிக்கிறது. கல்விச் சாலை மாணுக் கர்கள் வேலை நிறுத்தம் என்னும் வித் தையைப் பரிபூரணமாகக் கற்றுக் கொள்ள வும் இந் நாட் கல்விக் கழகங்கள் ஹேது வாக இருக்கின்றன.

ஆகையால் நாம் நம்முடைய வித்யார்த் திகளை நல்ல முறையில் பழக்கவேண்டு மானுல் பழங்காலத்துக் குருகுலவாச நடையை ஆரம்பிக்க வேண்டும். தற்கா லத்து மனிதர்கள் பழங்காலத்து நடையை ஆதரித்தால் தான் இம்மாறுதலைச் செய்ய லாம். மற்றும் இதற்கு இரு விஷயங்கள் கையாளப்படவேண்டும். குழந்தை களுக்கு எட்டு அல்லது பத்து வயதிற் குள் உபநயனம் செய்யப்படவேண்டும். அதன் பிறகு அவர்களை மற்றவர்கள் வீட் டில் விட்டு, பூஜை முதலிய சத் காரியங் களைச் செய்யத் தூண்டவேண்டும். இந் நடையில் குழந்தைகளைப் பழக்கினுல்

* ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியாள் வளவனூரில் நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சம்.

அவர்களுக்குச் சேவையில் ஓர் இனிப்பும், பக்தி மார்க்கத்தில் ஓர் விறு விறுப்பும் ஏற் படும். அதன் பிறகு வேண்டுமானால் அவர்களைத் தற்காலத்துக் கல்வித்துறை யில் இறக்கிவிடலாம். மற்றும், பொருட்கு வியல் வைத்திருப்போரும், அப்பொருளை ஈயும் மனத்தினரும், கற்றுத் தேர்ந்த வித் வான்களுக்கு உதவினால், அவர்கள் எவ் விதக் கஷ்டமுமின்றி கிராமங்களில் வசித் துக்கொண்டு, இந்நாட்டு நாகரிகத்தையும், வேதம் புராணம் இதிகாசங்கள் அழியாம லும், அவைகளைக் கற்க விரும்பும் பல ருக்கு இலவசமாகவே கற்றுக்கொடுக்க வும் முன் வருவார்கள். மேற்கூறியவாறு கல்வியைப் பழங்காலத்து முறையில் சீர் திருத்தம் செய்தால்தான் நம் நாட்டு இளை ஞர்கள் புத்தி தீக்ஷண்யம் அடைந்து வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள்.

ஹிந்து மதம்

ஹிந்து மதம் என்பது என்ன? சனாதனம் என்று நாம் கூறும் இந்தத் தர் மம் என்ன? அதற்கு ஹிந்து மதம் என்று எதனால் பெயர் என்றால், ஹிந்து ஜாதிதான் அதைப் பாதுகாத்து வந்திருக்கிறது. மலை யும் கடலும் சூழ்ந்த இந்தத் துவீபத்திலே தான் அது வளர்ந்தது; இந்தப் புராதன புண்ய பூமியில் ஆரிய ஜாதியினர் யுக யுகாந் தரமாக இதைக் காக்கவேண்டுமென்பது கடவுள் ஆக்ஞை. ஆனால் இது ஒரு நாட் டின் எல்லைக்குள் கட்டுப்படாதது. உலகத் தின் ஒரு பாகத்திற்குமட்டும் இது எந்நா ளும் உரியது என்பதில்லை. ஹிந்து மதம் என்று நாம் சொல்வது உண்மையில் சனா தன மதம்; ஏனெனில், எல்லா மதங்களையும் தனக்குள் அடக்கிக்கொண்டு இருக்கும் விசுவமதம் அதுதான். ஒரு மதம் உலகளா வியது அன்று என்றால், அது சனாதனமா காது. ஒரு குறுகிய மதம், ஒரு வகுப்பு மதம், ஒரு பிரத்தியேக மதம், ஒரு குறு கிய காலம், ஒரு குறித்த காரியம் ஆகும் வரையில்தான் நிலை நிற்க முடியும். நவீன விஞ்ஞான சாஸ்திரங்களின் முடிவுகளையும் வேதாந்தங்களின் முடிவுகளையும் முன் கூட்டி ஊகித்து அனுசரிக்கும் ஹிந்து மதந்தான் பௌதிக வாதத்தை வெல்ல முடியும். நமக்கும் பகவானுக்கும் இருக்கும் நெருக்கத்தை உணர்த்தி மனிதன் பக வானை அடைவதற்குச் சாத்தியமான எல்லா மார்க்கங்களையும் கூறுவது இது தான். அவர் எங்கும் இருக்கிறார். அவர் ஆக்ஞையால் தான் நாம் உலவி உயிர் வாழ் கிறோம் என்று எல்லா மதங்களும் ஒப்புக் கொள்ளும் உண்மையை ஹிந்து மதந் தான் ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வோர் எண்ணத்திலும் செய்கையிலும் வற் புறுத்துகிறது. இந்த உண்மையை உணர் வது மட்டுமன்றி, நம்புவதுமன்றி, வாழ் வின் ஒவ்வோர் அம்சத்திலும் அனுபவிக் கச் செய்வது இந்த மதந்தான். உலகம் என்ன என்பதை உலகத்திற்கு எடுத்துக் காட்டுவது இதுதான். உலகம் வாஸு தேவரின் லீலை. அந்த லீலையின் நுட்ப மான நியதிகளிலும் உன்னதமான விதி களிலும் நாம் எப்படிச் சரியாக நடந்து கொள்ளலாம் என்பதை ஹிந்து மதம் புகட்டுகிறது. வாழ்க்கையை ஒரு சின் னஞ் சிறிய அம்சத்திலும் மதத்திலிருந்து பிரிக்காமலிருப்பது இதுதான். அமிருதத் வம் என்ன என்பது இதில் தெரியும்; மரண பயத்தை முற்றிலும் போக்குவது இதுதான்.

—ஸ்ரீ பகவான் அரவிந்தயோகி.

தெய்வக் காட்சி

(வே. நாராயணன், எம்.ஏ., எம்.எல்.)

தெய்வம் மானுட வுருத்தாங்கி வரும் போதும் தெய்வத்தைக் கண்ணுற் கண்டோம் என்று இன்புறும் மக்கள் மிகச் சிலரே ஆவர். மக்களிற் பெரும்பாலோர் தேவ மாயையால் மயங்கிக் காலந்தோறும் சாதுக்களைக் காத்துத் தருமத்தை நிலை நிறுத்துவதற்கெனப் பகவான் செய்யும் அவதாரங்களின் உண்மையை உணராமல் அவற்றையெல்லாம் மானுடப் பிறவிகள் என்றே கொள்கின்றனர். இராமாவதாரத்தை அறிந்தவர்கள் தண்டகாரணியத்திலே வசித்த முனிவர்களே ஆவர். கிருஷ்ணுவதாரத்தின் பெருமையை அர்ஜுனனுக்கும் தாமே எடுத்துச்சொல்லித் தம் ஸ்வரூபத்தையும் மெய்ப்பித்துக்காட்ட வேண்டி இருந்தது. பாண்டவர்களும் ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் தங்களுக்குரிய தோழனுகவே பாவித்து வந்தனர் என்றுல் பிறரைப்பற்றிச் சொல்வானேன்? விதுரர், பீஷ்மர் உத்தவர் போன்ற ஒரு சிலருக்கே அவதார ரகசியம் தெரிந்திருந்தது. மேலும் அவதாரங்கள் நமக்குச் சமகாலத்திலே நேருவன என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. ஆதலின், தெய்வத்தைக் காண்பது எப்படி?

"நூலில் மணிகளைப்போல இவையெல்லாம் என்னிற் கோக்கப்பட்டுள்ளன" என்பது ஸ்ரீ கீதா வசனம். எனவே கோத்த மணிகளைக் காணுது அவற்றுள் ஊடுருவிச் செல்லும் சூத்திரத்தைக் காணுவதே தெய்வத்தைக் காண்பதற்கு வழி என்று ஏற்படுகின்றது. இக்காட்சி ஞானக் கண் கொண்டே காணுதற்குரியது. "சர்வமும் வாசுதேவன்" என்னும் ஞானம் படைத்த மகாத்மாவைக் காண்பது அரிது. "உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்" என்னும் ஞானத்தைப் பெறுதல் வெகு துர்லபம். பரம யோகிகளுக்கும் பக்தர்களுக்குங்கூட பகவானே இரக்கங்கொண்டு ஞான தீபத்தை ஏற்றித் தன்னைக் காணுமாறு அருளாதொழிந்தால் பகவானைக் காண இயலாது என்றுல் இதர அஞ்ஞானிகள் பகவானைக் காண்பது எவ்வாறு இயலும்?

நம் போலிகளுக்கெல்லாம் பிரதிநிதியாகவே பார்த்தன் பகவானிடம் "பகவானே! எவ்வெப்படிகளிலே உன்னை நான் கருதல் வேண்டும்" என்று விண்ணப்பிக்கின்றுன். பகவான் கூறிய விடையே நமக்கெல்லாம் தெய்வக் காட்சி பெறுவதற்கு வழி காட்டியாக அமைந்துள்ளது: "உயிர்கள் அனைத்திலும் உள்ளுளே நிற்கும் ஆத்மா நான்; அவ்வுயிர்களின் ஆதி நான்; மத்தியமம் நான்; இறுதியும் நானே" என்று தொடங்கி எவ்வெப் பொருள்களில் தெய்வ விபூதி விசேஷமாக அமைந்துள்ளது என்று தொகுத்துக் கூறி, "பார்த்தா! என் திவ்விய மகிமைகளுக்கு ஒரு முடிவு இல்லை. ஒரு சிறிதே கூறினேன்; எதெல்லாம் பெருமையுடையது, உண்மையுடையது, அழகுடையது, வலிமையுடையது, அதெல்லாம் என் தேஜஸின் ஒரு அம்சத்தால் உண்டாயிற்று என்று உணர்வாய்" என்று உபதேசிக்கிறுர்.

எல்லாவற்றையும் சமமாகவே நோக்கும் சக்தியை அப்பியாசத்தால்மட்டுமே, பெறல் ஆகும். "பிராம்மணனிடத்திலும் பசுவினிடத்திலும் யானையினிடத்திலும் நாயினிடத்திலும் நாய் தின்னியினிடத்திலும் சம திருஷ்டியுடையவர்களே பண்டிதர்கள். ஆனுல் பாமரர்களும் இத்தகைய தெய்வக் காட்சியைக் காலக் கிரமத்தில் பெற்றின்புறலாம் என்பதே கீதாசாரியன் கூறும் உறுதிமொழி. பெருமை, உண்மை, அழகு, வலிமை இவை நன்கமைத்த பொருட்களையெல்லாம் பகவானது வடிவங்களாகக் கொண்டு வழிபட்டு வந்தால், காலக் கிரமத்திலே, எல்லாப் பொருட்களிலுமே பகவானைக் காணலாம். பெருமை, உண்மை, அழகு, வலிமை இவை யாரையும் வசீகரிக்கும் தன்மை

வாய்ந்தன. பெரியோர்களைத் தரிசிக்கும் போது அவர்களது பூத வுடலை மட்டும் நாம் காண்பதில்லை. அவர்களுடைய பெருமைக ளெல்லாம் மூர்த்திகரித்து விளங்குகின்றன. அதனாலேதான் 'நல்லாரைக் காண்பதுவும் நன்றே' என்றனர் ஒரு தமிழ்ப் பெரியார். இவ்வாறு தெய்வத்தன்மை மிகுந்து விளங்கும் பொருட்களை தெய்வத்தின் மூர்த்தியாகக் கொண்டு ஆராதித்து வந்தால், காலக்கிரமத்திலே தெய்வம் ஊடுருவி நின்று நம்முடைய கட்புலனையும் வணக்கத்தையும் பெறத்தகாத பொருள் ஒன்றுமே இவ் வுலகிலே இல்லை என்னும் உண்மையைப் புலப்படுத்தும். தெய்வக் காட்சி பெறுதற்குரிய இவ் வுபாயத்தைச் சுலபமாக அனுஷ்டிப்பதற்கே ஆலயங்கள் ஏற்பட்டன. ஆலயங்களிலே யுள்ள திருமூர்த்திகளிலே தெய்வத் தன்மையை நாம் காண்பது சுலபம். "ஆகமப்படி ஆராதிக்கப்பெறும் ஆலயங்களிலுள்ள மூர்த்தங்களில் நான் ஊடுருவிநின்று காட்சி தருகிறேன்" என்று பகவானே உறுதி கூறியிருப்பதால், அவ்விடங்களிலே யெல்லாம் நம் போன்ற பரம பாமரர்களுக்கும் தெய்வ சான்னித்தியம் தோன்றக்கூடும். எனவே, இந்த ஆலயங்களை அஞ்ஞான பீடங்களாகவோ, சோம்பேறி மடங்களாகவோ, ஆபாசச் செயல்களுக்கு அனுகூலமான இடங்களாகவோ, கொள்ளையிடுதற்குரிய பொருட் குவியல்களுடைய ஸ்தாபனங்களாகவோ, ராஜீயப் பேய்கள் தலைவிரித்தாடுவதற்குரிய நடன அரங்கங்களாகவோ கொள்ளாமல், தமர் உகந்த உருவங்களையெல்லாம் தாங்கி நிற்கும் தனித் தெய்வம் அபார கருணைப் பிரவாகத்தால் என்றும் எப்பொழுதும் காட்சிதரும் சன்னிதானங்களாகவே கொள்ளவேண்டும்." எல்லாவற்றிலுமே தெய்வத்தைக் காணும் ஞானக்கண் பெறுவதற்கு ஆலய வழிபாடு தான் உபாயமாகும்.

அவதாரத்திலே பகவானது நிஜஸ்வரூபத்தைப் பலர் அறியாமற் போனது போகவே, ஆலயங்களிலேயுள்ள அர்ச்சா மூர்த்திகளிலே தோன்றக்கூடிய பகவத் ஸ்வரூபத்தைக் காணாமல் பலர் மரத்திலும் கல்லிலும் செம்பிலும் ஆன விக்கிரகங்களையே காண்பர். "இவர் உண்மை அறியாதவர்கள்" என்று ஆகமங்கள் முறையிடுகின்றன. உண்மையாக ஆலயங்களிலே வழிபடுவோர்க்கு அங்குள்ள மூர்த்தங்கள் எப்பொருளால் ஆனவை என்பது தோன்றக்கூடாது. அவற்றுள் இலங்கும் பரதெய்வமே தோன்ற வேண்டும். அவ்வாறு காண முயல்வதே ஆலயஞ் செல்வோர் செய்யத்தக்க செயல்.

ஆலயங்களைக் கண்காட்சிச் சாலைகள் ஆக்கி, அங்குள்ள விக்கிரகங்களிலே தெய்வம் ஊடுருவி நிற்பதை நம்பாதவர்களை அங்கு விரோதார்த்தமாகச் சென்று உலாவ அனுமதிப்பது அநியாயம் என்று உணர்ந்து, அவ்வாறு செல்வதைத் தடுத்தும், தெய்வக்காட்சி பெறும் விருப்பத்தோடுமட்டுமே ஆலயங்களுக்குச் செல்வது நியாயம் என்று உபதேசித்தும், அனுஷ்டித்துக் காட்டியும், ஆலயங்களின் விபூதிகள் அனைத்தும் என்றும் அழியாமல் விளங்கும்படி செய்தல் வேண்டும்.



பக்தி

(ஸ்ரீராம், மாயவரம்)

ஜீவன்களுக்கு இயற்கையாக உண்டாவது அன்பு. அன்பினால் ஏற்படுவது பக்தி. மாத்ரு பக்தி, பித்ரு, பக்தி, குரு பத்தி, பதி பக்தி, ராஜ பக்தி, தேச பக்தி, தெய்வ பக்தி என்னும் பலவகை பக்திகளுள் தெய்வ பக்தியே மோக்ஷ ஸாதன மாகும். "பக்தி பண்ணிக்கொண் டிருந்தால் முக்தி பெறலாமே" யென்று ஆரம்பிக்கும் பாட்டைச் சாதாரணமாக எல்லாரும் கேட்டிருப்பார்கள். ஆனால் இது விஷயத்தை மனத்திலுணர்ந்து பக்தியைக் கைக்கொண்டிருப்போர் வெகு சிலரே.

இவ்வுலகில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் பைத்தியங்கொண் டிருக்கின்றனர். பலருக்குப் பணம் சேகரிப்பதில் பைத்தியம்; மற்றொரு சாராருக்கு ஸ்திரீகள் விஷயத்திலும், இன்னும் நிலம், வீடு, தோட்டம், ராஜ்யாதிகாரம், உத்தியோகம், படிப்பு, சினேகம், சூதாட்டம், நாடகம், கேளிக்கை, சங்கீதம், சாஸ்திர ஆராய்ச்சி முதலிய பற்பல பைத்தியங்களும் உண்டு. ஆனால் உண்மையில் நற்கதியடைவிக்கக் கூடிய தெய்வப் பைத்தியம் (பக்தி) பிடித்திருப்பவர் வெகு சிலரே. அப்படிப்பட்டவரே உத்தமராவர். ஏனெனில் அவர்களுடைய நோக்கமொன்றே என்றும் அழிவில்லாத பதவியை யளிக்க வல்லது. முற்கூறிய ஏனையோர் அடைவதெல்லாம் அழிந்துபோகக் கூடியவை.

ஹிந்து தர்மக் கொள்கைப்படி யுகங்கள் நான்கு என்பது தெரிந்த விஷயம். அவற்றுள் முதன்மையான க்ருத யுகத்தில் த்யானமும், இரண்டாவதான த்ரேதா யுகத்தில் யக்ஞங்களும், அதற்கடுத்த த்வாபரயுகத்தில் ஈசுவர பூஜை, அர்ச்சனாதிகளும், கடைசியான இக்கலியுகத்தில் பகவான் நாம ஸங்கீர்த்தனமும் முக்தி மார்க்கங்களாய் வகுத்திருக்கிறார்கள். கலியில் தர்ம தேவதை தன் மூன்று கால்களையுமிழந்து பாக்கியான ஒரே காலில் நின்று தத்தளிக்கிறாளென்று ஏற்பட்டிருக்கையில், ஜனங்கள் கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காக மட்டும் மிக சிரமப்படுகிறார்கள். அதிலேயே அநேகமாக தங்கள் ஆயுள் காலம் முழுவதையும் வீணாக்கிவிடுகிறார்கள். ஜீவனோபாயம் திருப்திகரமாய் அமைந்த பலரும் நம்மைப் படைத்துக் காத்து அழிக்கும் கடவுளைச் சிறிதும் நினையாமல் முடிவில் துன்பமயமான இவ்வுலக சுகங்களிலேயே பற்றுவைத்துக் காலங் கழிக்கிறார்கள். குழந்தையாயிருக்கும் பொழுது விளையாட்டிலும், யௌவனத்தில் யுவதிகளிடமும், வயோதிகத்தில் கவலையிலுமாகக் காலம் வீண்போகிறதேயல்லாது ஈஸ்வரனிடம் பக்தி ஏற்படுவது அரிதாயிருக்கிறதென்று ஸ்ரீமத் சங்கராச்சாரியார் பஜகோவிந்தத்தில் அறிவித்திருக்கிறார்.

இந்தக் கலியுகத்தில் பகவன் நாமாவை யார் சொன்னாலும் அவர்களுக்கு அதுவே முக்திக்கான சாதன மாகுமென்று வகுத்திருக்கிறார்கள். நம் தினசரி வாழ்க்கை பாப மயமாயிருக்கிறது. பாபச் செயல்கள் மூலம்தான் அநேகர் பிழைக்கின்றனர். அவரவர்க் கேற்பட்ட கடமைகள் காரியங்களெல்லாம் கெட்டுப் போயிருக்கின்றன. இப்படிப் பட்டவர்களுக் கெல்லாம் கதி "கோவிந்த கீர்த்தனமே". நாம ஸ்மரணம் எந்த தெய்வத்தின் பெயரானாலும் சரிதான். எல்லாம் ஒன்றே. சிவ, சம்பு, சங்கர, மகாதேவ, ராம, கிருஷ்ண, கோவிந்த, ஹரே, கேசவ, நாராயண, எதுவானாலும் அந்தப்பரம்பொருளையே குறிக்கும். கடவுள் பரப்ரம்ம ஸ்வரூபிதான். ஆதியந்தமின்றி, எல்லாமாய், நிராகாரமாய், நிர்வண்ணமா யிருப்பவரைத் தியானிக்க மனத்தில் பதியக்கூடிய ஏதாவதொரு ஸ்வரூபத்தை முதலில் கற்பித்துக்கொண்டு பக்தி செய்து வந்துதான் அதன் பிறகு முடிவில் அந்த பரமாத்மாவின் அத்துவித நிச்சய, அகண்டாகார, ஸச்சிதானந்த ஸ்வரூபத்தைச் சாதாரணமாகத் தியானிக்க

மனோ நிலை

(கா. சி. வேங்கடரமணி)

சிருஷ்டியின் லீலை வேற்றுமை. ஆனாலும், சிருஷ்டியின் காதல் ஒற்றுமை.

வேற்றுமையில் ஒற்றுமையை உணரும் உணர்ச்சி அன்பு ஒன்று தான்—காரில் சுரந்து நிற்கும் நீர் போல், வேற்றுமையில் ஒற்றுமை நிற்கிறது.

அன்பு, நமது மனோநிலையைப் பொறுத்தது தான். அன்பு, பூமியில் உள்ள நீர்ப் பெருக்கு போல். மணலை விலக்கினால் ஜலம். காமக்குரோதங்களை நீக்கினால் அன்பு வெள்ளம் ஊற்றுப் பெருக்கு போல் நமது உள்ளத்தில் பெருகும். அது நமது செயலுக்குப் புத்துயிர் அளிக்கும்.

நமது தொண்டில் 'தான்' என்னும் எண்ணத்தை விலக்கி, தொண்டை ஈசுவரார்ப்பணமாய்ச் செய்தால், மாரி காலத்து மழைபோல் சகல ஜீவன்களுக்கும் பயன்படும். இதுவும் நமது மனோ நிலையைப் பொறுத்தது தான். பழத்தில் விதை போல் அன்பின் உள் ஞானம். இந்த அன்பு பழுத்தால் ஞான வித்துத் தானாகவே உண்டாகிறது. ரசமும் ஸ்வர்ணமாய் மாறி விடுகிறது. மனோநிலை துரிய நிலையை அடைகிறது. பரமாத்மாவுடன் லயிக்கிறது. சாந்தம் குடியேறி ஜீவாத்மாவை பரமாத்மாவுடன் சேர்த்து விடுகிறது. எல்லையை யழித்து எல்லையில்லா பேரானந்தத்தைப் பெருக்கி விடுகிறது.

நமது மனோ நிலையையும், செயலையையும் ஈசனுக்கு நாம் அர்ப்பணம் செய்தால், பள்ளத்தை விடாமல் ஓட்டியோடும் நதி எப்படி நிச்சயம் கடலையடையுமோ, அப்படியே நமது ஜீவாத்மா பரமாத்மாவை நிச்சயமாயடைந்து ஆனந்தத்தில் லயிக்கும். நதியின் ஓட்டம் பள்ளத்தைப் பொறுத்ததுபோல், நமது செயல்களும் நம் மனோநிலையைப் பொறுத்ததுதான்.

இந்தத் துரிய மனோநிலை தான் மோக்ஷம். இதை அடைய வேண்டியதும் இந்த ஜன்மத்திலேயே தான். அதுவும் உயிர் இருக்கும்பொழுது தான்—போன பிறகு அல்ல.

அதீத காயகல்பம்

[டி. எஸ். ராமானுஜம் எம். ஏ; எல். எல். பி. (லண்டன்)]

சில நாள் முன் பண்டித மாளவியாஜி சித்த ஔஷதமுறை யொன்றுக் காளாகித் தம் வயோதிகத்தைச் சற்று விரட்டித் திட காத்திரரானா ரென்ற செய்தி பத்திரிகை மூலமாய் வெளிப்பட்டது. உடனே இந்தியாவில் பழமையாய் விளங்கிநிற்கும் "காயகல்பம்" என்ற சித்தியைப்பற்றிப் பல ஜனங்கள் விசாரம் செய்ய ஆரம்பித்தனர். காய வலு குன்றி யிருக்கும் இந்து தேசம் மற்ற தேசங்களைப் போல் பராக்கிரமம் பெற்று ராஜீய விஷயங்களில் முன்னேற்றமடைவதற்குக் "காயகல்பம்" ஓர் பரம ஔஷதமென்றும் அதைப்பற்றி ஆராய்ச்சிசெய்வதற்கும், அதன்குணத்தை விரும்புவோர் அதை அடையும்படி செய்வதற்கும், ஓர் சாலையை ஏற்படுத்த வேண்டுமென்றும் மாளவியாஜி பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். மேல்நாட்டார்கூட இவ்விஷயத்தில் உத்சாகம் காட்டுவார்கள் போல் கூடத் தோன்றியது. ஆனால் சில மாதங்களுக்குள் மேற்கண்ட கிளர்ச்சி முற்றிலும் அடங்கிவிட்டது. தற்சமயம் "சண்டை" என்று சொல்லப்படும் பேய் அடங்காப் பிடாரி வேஷம் தரித்து உலகத்தையே ஆட்டிவைக்கும் தருணத்தில் "காயகல்பம்" என்றால் ஜனங்கள் நகைக்கவும்கூடும். எனினும், "கடைசியில் நகைப்பவன்தான் நன்றாய் நகைப்பவன்" என்ற முதுமொழியை ஒட்டி, காயகல்பத்தையும் தாண்டி நிற்கும் அதீத காயகல்பம் என்னும் யோகமுறை ஒன்றை உலக ஜனங்களின் நன்மைக்காக எடுத்துரைக்கத் துணிந்தேன்.

காய கல்பத்தால் ஒருவன் தன் வாழ்நாளைச் சுமார் முன்னூறு வருஷங்கள் நீடித்து வைத்துக் கொள்ளலாம். மூன்று தடவைக்குமேல் காய கல்பம் ஒரே மனிதனுக்குப் பலிக்காது. ஆதலால் இவ்வழியால் சுமார் தொள்ளாயிர வருஷத்துக்கு மேல் மனித சரீரத்தை அழியாமல் வைத்துக்கொள்ள முடியாது. ஆனால் மனிதக் காயத்தை எக்காலும் அழியாமல் வைத்துக்கொள்ள முடியுமா? முடியுமென்று தோன்றுவதுடன் அவ்விதம் முடித்து வைப்பது தான் தெய்வ சங்கல்பம். அதற்காகத்தான் சிருஷ்டிதர்மம் பிறந்து நாலாவிதத்திலும் அனுபவம் பெற்று வருகிறதென்றும் தோன்றுகிறது. யாருக்குத்தான் மனப் பூர்ணமாய் இறக்கும் ஆசை உண்டு? பல கஷ்டங்களினால் "போய் விட்டால் தேவலை" என்று சொல்லுகிறோமே ஒழியப் "போவதற்கு" மனம் உண்மையில் இடம் கொடுக்கவில்லை. இறக்க ஆசைப்பட்டா பணத்தை விழுந்து விழுந்து சேகரிக்கிறோம், வீடுகளைக் கட்டி சிங்காரிக்கிறோம், மற்ற காரியங்களை ஆசையுடன் செய்து வருகிறோம்? ஒருவன் வீண் பேச்சைவிட்டுத் தனது உள் எண்ணம் என்ன என்று நிதானித்து யோஜித்தால் சாஸ்வதத்தை விரும்பித் தான் ஓர் உயிர் ஓர் உடலில் புகுகிறதென்ற ரகசியம் வெளிவரும். காலளவில், சாஸ்வதமாய் இருக்கவேண்டிய பலம் உடலுக்கில்லாதபடியால் உயிர் உடலை விடவேண்டியிருக்கிறதே ஒழிய, "புனரபி ஜனனம், புனரபி மரணம்" என்பது பகவத் லீலையாகாது. பகவானின் முக்கிய குணம் சாஸ்வதம், அழியாமை, மாறாமை. க்ஷணத்திற்குக் க்ஷணம் தன் நிலையை மாற்றுவது ராக்ஷஸ வேலை. மாயவித்தைகளைக்கற்றுப் பல ரூபமாறுதல்களைச்செய்து கொண்டார்களென்று ராவணன் பரிவாரங்களைப் பற்றி ஸ்ரீ வால்மீகி சொல்லியிருக்கிறார்.

சிருஷ்டி எதற்காக ஆரம்பிக்கப்பட்டது? உபநிஷத்துக்களை நம்பினால், "பரம்பொருள் தனக்குள் அடங்கி யிருக்கும் பல பராக்கிரமங்களை ஒன்றொன்றாய் வெளிக்காட்டுதல்" என்ற ஆசை ஜகத் சிருஷ்டி காரணமாய் விளங்கி வருகிறதென்று கருத வேண்டும். ஈச்வர பாகங்கள் பல மனித வாழ்வில் வெளிக்காட்டப் படுகின்றன. ஆனால் ஒன்று மட்டும்

விசேஷமாய் இன்னும் தொக்கி நிற்கிறது. அஃதாவது ஸ்தூல மாறுதல், காயக் கிலேசம் என்பதே. ஆத்மாவும் மண்ணும் கலந்த மனித பிண்டத்தில் ஆத்ம பாகம் அழிவற்றும், மண் பாகம் அழிவுற்று மிருப்பதால் சிருஷ்டியின் தற்காலக்குறை. ஆதலால் சிருஷ்டி தர்மமே இன்னும் ஓர் பூர்த்திக்கு வரவில்லையென்றும் சொல்லலாம். அப் பூர்த்தி எத்தகையதா யிருக்க முடியும்?

பகவத் கீதையில் "ஜராமரண மோக்ஷாய" என்ற வார்த்தைகளடங்கிய ஓர் சுலோக மிருக்கிறது. "ஜரை" என்ற வடமொழிக்கு "கிழத்தனம்" என்ற பொருள். மரண மென்ருல் சாவு. மோக்ஷ மென்ருல் விடுதலை. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் நோக்கப்படி, கிழத்தனம், சாவு இவ்விரண்டி லிருந்தும் விடுபடுவதே மோக்ஷமாகும். இம் மண்ணுலகில் பிறந்தவனுக்கன்றே கிழத்தனமும் சாவும் உண்டு. ஆதலால் பிறக்காம லிருப்பது மோக்ஷ மல்ல; பிறந்து முதுமை, மரணம் இவ் விரண்டையும் விலக்குவதல்லவோ மோக்ஷம்? இது வரையில் எப்பேர்ப் பட்ட சித்தர்களும் ரிஷீஸ்வரர்களும், பக்த சிரோமணிகளும், இறந்த பின், மறுபடியும் பிறந்து வருகிருர்கள். பிறந்து இம் மண்ணுலகில்தான் மோக்ஷமடைய வேண்டுமென்றும் தோன்றுகிறது.

ஈச்வரனென்பது அளவுக் கடங்காத பிராண சமுத்திரம். அதில் இல்லாத ஐச்வரியங்கள் இம் மண்ணுலகில் கிடையா. இப்படியிருக்க, ஏன் ஒரு மனித உடலுக்கு ஐம்பது வருஷம், எண்பது வருஷம், நூறு வருஷம், என்று அளவு கட்டிய கடுகுபோலுள்ள பிராணன் கொடுபடுகிறது? கோமுட்டி கடையில் காலணுவுக்கு வெல்லம் வாங்குவதைப் போலல்லவா நாம் அடையும் ஜீவ இனிப்பு தோன்றுகிறது. இதற்குக் காரணமென்ன? ஒன்று தான் எனக்குத் தோன்றுகிறது. சிருஷ்டி கர்த்தாவைப் பிரும்மா என்கிருேம். பிரும்மா என்பது ஓர் பிரமை, மயக்கம். ஆசையில்லாமல் சிருஷ்டி பீஜம் உண்டாகாது. அப் பீஜம் உண்டாவ தெவ்வாறென்று உண்டாகும் தருணத்தில் தோன்ருது. பிற்பாடுதான் அதைப்பற்றி யோஜனை பிறக்கும். மனிதன் மனிதனை உற்பத்தி செய்வது ஆதி சிருஷ்டியை மறுபடியும் நடிப்பதுபோல், அந் நடனத்தைக் கவனித்துப் பார்த்தோர்களுக்கு, ஓர் உயிருள்ள கருவை உண்டாக்க வல்ல ஆசைக்குத்தான் பிரும்மா, அல்லது பிரமை, என்ற பெயர் தகுமென்று தோன்றும். அவ் வாசை உருஎடுத்தால் விஷ்ணு என்கிருேம். "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்," என்ற வடமொழியால் ரூபம் தரித்த இவ் வுலகின் எப்பொருளையும் விஷ்ணு என்று சொல்ல வேண்டுமென்பது ஏற்படுகிறது. மனிதன் விஷ்ணுவின் சொரூபம் என்ற கருத்தடங்கிய வடமொழி ஒன்றும் இருக்கிறது. உடல் உண்டான பிறகு அதற்குள் புகும் உயிரைச் சிவன் என்கிருேம். ஜீவன் என்பது சிவனின் அம்சம். கால அளவுக்குள் அகப்பட்ட ஜீவன் மனித உடலுக்கு அளிக்கப்படுதலால், அது அழியும் தன்மையுடன் கலக்கிறது. எனவே, சிவன் சம்ஹார கர்த்தா என்ற பட்டம் நம்மிடம் பெற்ருர். உடலைச் சிருஷ்டிக்கும் ஆசை பிரும்மா; உற்பத்தியான உடல் விஷ்ணு; அதற்குள் புகுந்து நடமாடும் ஜீவன் சிவன். திருமூர்த்தி கட்டங்கள் உயிருள்ள மனிதகாயத்திலேயே பார்க்கலாம். மும்மூர்த்திகளும் ஒன்ருய் லயப்பட்டு அவர்களின் ஆதி நிலையை அடைந்திருக்கும் தருணம் "காய கற்பம்" ஆகும் பொழுதுதான் ஏற்படுகிறது. அச் சந்தர்ப்பத்தைக் கவனித்தால்தான் பிரும்ம ஞானம் முற்றிலும் கிடைக்கும். உடலை விட்டபின் திருமூர்த்திகளின் லயம் ஏற்படச் சந்தர்ப்பம் கிடையாது. இதை உணராது ஸ்தூலம் கேவலமானது, ஒரு நாற்றப்பை, என்று அதை அலக்ஷியம் செய்து, ஆசனம், நியமனம், மந்திரம், அப்பியாசம், முதலிய முறைகளால் அதை வாட்டி, அதன் பெருமையையும் அர்த்தத்தையும் அறியாது, ஸ்தூலத்தை விடுவதே மோக்ஷமென்று கருதி, பல மதங்கள், ஐதீகங்கள், வேதங்கள், முதலிய சித்தாந்தங்களை ஏற்படுத்திய அஞ்ஞானம் நமது பிறப்புக்கே ஆஸ்பதமாயிருக்கும் பிரமையின் வெளிவீச்சு. இவ்வக்ஞானம்தான் "சாஸ்வதம்"

என்ற பிரும்ம தத்வத்தை நம்மிடம் கொடுக்காமல் நம்மை மதிமயக்கி நிற்கிறது. இதற்குத்தான் மாயை யென்ற பெயர் தகும். இம்மாயையைப் போக்கடிப்பதற்கே, தனது ஸ்வயதர்மமாய் விளங்கும் சிருஷ்டியை நம்மிடம் ஓர் அளவில் பிரும்மம் விட்டு விட்டிருக்கிறது போலும். அத்தர்மத்தை நாம் பிரமைகொண்டு நடத்துங்கால் அப்பிரமையை போக்குவதெவ்வாறு என்று கவனித்தால், ஒரு பிரும்மா எப்படி ஜகத்காரண வஸ்துவாய் மாறலாம் என்ற ரகசியம் நமக்குப் புரியும். பிறகு உலகத்திலுள்ள எல்லா மாதாக்களுக்கும் பிதாக்களுக்கும் பிதாவாய் விளங்கும் பிரும்மத்துக்கு உள்ள சிருஷ்டி சக்தியை நாமும் பெற்று அழிவில்லா, மாறாத, உடல் ஒன்றை உற்பத்தி செய்யவல்ல பீஜத்தைத் தயார்செய்ய முடியும்; எக்காலத்தும் நிலைபெற்று நிற்கும் காயமொன்றை இவ்வுலகத்தில் படைத்து அதற்குள் ஓர் ஜீவனைப் புகுத்துப் பிரும்ம துல்ய மடைந்த மனிதனை ஏற்படுத்தி மண்ணுலகுக்கும் விண்ணுலகுக்கும் ஓர் உண்மை சம்பந்தத்தை ஏற்படுத்தலாம். இதற்கே அதீத காயகல்பமென்ற பெயரை நான் அளித்திருக்கிறேன். இதன் உண்மை எட்டு வசிஷ்டர்களுக்குக் குருவாய் நின்றதாக புஜண்டர் எழுதிய பின்வரும் ஞானக் கும்மியில் கண்டிருக்கிறது :—

“ மூலம் இருப்பது எம்முக்குள்ளே — அதில்
முக்தி பெறுவது மத்திக்குள்ளே
சீலம் இருப்பது சொன்னேனே— அதைச்
சேர்ந்து பாரடி ஞானப் பெண்ணே =

பாரில் இருப்பதும் தண்டுக்குள்ளே — அது
பத்தி இருப்பதும் இரண்டுக்குள்ளே
கோரி இருப்பதும் சொன்னேனே— அதைக்
கூடியே காணலாம் ஞானப் பெண்ணே =

காணவும் உண்டானத் தீவிரத்தில்— அது
கட்டியே சேர்த்ததும் பிண்டமாச்சு.
கோணலும் இல்லாமல் செய்யுமாமே— அது
கோடிகள் கண்டாயோ ஞானப்
பெண்ணே =

கண்டம் இருப்பது ஆவலுள்ளே— அதைக்
காத்துமே கொள்ளும் சமுத்திரந்தான்
தண்டம் இருப்பது சொன்னேனே— அதில்
தருமமாங் கூடும் ஞானப்பெண்ணே ”=

“ உடம்பினில் உத்தமனைக் காண் ” என்ற பயனே உடம்பினால் ஆகும் பயனென்ற ஔவைக் குறளின் கருத்தும், அதீத காயகல்பத்தைத் தான் சுட்டிக் காட்டுகிறது. பிரும்மம் ஓர் வித்தை உண்டுபண்ணுவ தெவ்வாறு என்பதைக் கண்டு பிடிப்பதற்கே பிரும்ம வித்தை என்று பெயர். எப்புத்தகத்தில் இவ்வித்தை வரையப்பட் டிருக்கிறது. இயற்கை அறிவு இயற்கையிலன்றோ காணப்படும்! ஆகாயத்தில் பால் வீதி (Milk way) என்று சொல்லப்படும் நக்ஷத்திரக் கோலத்தைக் கவனித்தால் ஜனன லக்ஷணம் பிரியும். அக்கோலமே உண்மையான ஜாதகம்.

மீன ராசியின் நின்று ஓர் ஒளிகிளம்பி மிதுன ராசிக்கு ஓடிப் பிறகு அங்கிருந்து தனுர் ராசிக்கு வீசி பிறகு அங்கிருந்து கன்னியா ராசிக்கு ஓடும் அற்புதத்தை நாவினாலும் புகழ முடியுமா. மீனம் அல்லது மச்சம் ஓர் உயிர் புள்ளியைக் குறிக்கும். மேஷம் பெண், சுரோணிதம். விருஷபம் ஆண், சுக்கிலம். மிதுனம் (மைதுனம்) ஆணும் பெண்ணும் சேர்ந்த கட்டம். மனிதனின் மூளைக்குள்ளிருக்கும் ஆயிரம் இதழ்கள் பெற்ற தாமரைப் பூவைப் போல் விளங்கும் “ ஸஹஸ்ரஹாரா ” என்று சொல்லப்படும் ஓர் சூக்ஷ்ம பாகத்தில் நின்றும் ஓர் உயிர் புள்ளி கிளம்பி மிதுன கட்டத்தை அடைகிறது. பிறகு அப் புள்ளி தனுசு அல்லது வில்லைப் போல் அமைக்கப்பெற்ற முதுகெலும்புக்குள் ஏற்பட்டிருக்கும் இடா, பிங்களா, சுழி முனை, என்ற சூக்ஷ்ம நரம் போட்டங்கள் வழியாய் தலையினின்று கீழே இறங்கி முள்ளந் தண்டுக்கு அடிவாரமாய் நிற்கும் குண்டலினி என்ற உற்பத்தி ஸ்தானத்துக்கு வருகிறது. அங்கிருந்து பெண்ணுக்குள் தாவி “ கன்னி ” என்னும் கற்பக் கிரகத்தை அடைகிறது. அது “ Z ” (ஸெட்) என்ற ஆங்கில எழுத்து போல் தோன்றுகிறது. ‘ஸெட்” என்ற ஆங்கிலப் பதத்திற்கு முடிவடைந்த

வரிசை என்பதுதான் பொருள். பிறவி ரகசியத்தை உணர்ந்தால் அதன் பூர்த்தி ரகசியம் வெளியாகுமென்ற மெய்யும் அதில் தொக்கி நிற்பது போலும்.

உடலுக்கு உயிர் கொடுப்பதும் மேற் கண்டவாறே. தமிழ் எழுத்துக்கள் உயி ரெழுத்து மெய்யெழுத்து என இரு வகைப்படும். உயிரெழுத்துக்கெதிர் செத்த எழுத்தல்லவா ? மெய்யெழுத்துக் கெதிர் பொய்யெழுத்தல்லவா ? மெய் என்றால் உடல். ஓர் உடலுக்கு உயிர் கொடுப்ப தைத்தான் தமிழ் எழுத்துக்கள் சுட்டிக் காட்டுகின்றன. "க்" என்ற எழுத்து "க" என்ற உடல் மேல் தொக்கி நிற்கும் உயிர் புள்ளி யடைந்த ஓர் எழுத்து. அதை "இக்" என்று உச்சரிக்கிறோம். ஏன் "இ" என்ற உயிரெழுத்தைக் கொண்டு "க்" என்ற எழுத்தை உச்ச ரிக்கவேண்டும் ? ஏன் "அக்" "அங்" என்று சொல்லக்கூடாது. "அ" என்ற முதல் உயிரெழுத்தைத் தள்ளிவிட்டு, "இ" என்ற உயிரெழுத்தை எடுத்துக் கொண்டதின் காரணமென்ன ? "இ" என்ற எழுத்து "கொடு" என்று சொல் வதைப்போல் தொனிக்கிறது. எதைக் கொடுப்பது ? உடலுக்கு ஓர் உயிர்ப் புள் ளியைக் கொடுப்பது. எவ்வாறு ? பால்வீதி யென்ற வானொளியைப் பார் !

இது வரையிலும் தெரியாத பிரும்ம ரகசியம் இனிமேலோ தெரியப் போகிற தென்ற சந்தேகம் நண்பர்களுக்கு உதிப் பது சகஜம். அச்சந்தேகத்தைப் போக்கக் கூடியது வாதமல்ல, வால் வெள்ளி. வால் நக்ஷத்திரம் சூரிய ஆதிபத்யத்திற் கடங் கிய கிரகங்களின் பூமிக் கப்பால்நின்று வருகிறபடியால், உலகத்திலில்லாப் புது சக்திகளைக் கொண்டுவந்து நமக்கு அளிக் கிறது. இவ் வழியால் தான் இதுவரை யிலும் நமது அறிவு வலுவுற்று வளர்ந்து பல இயற்கை ரகசியங்களை உணர்ந்திருக் கிறோம். 1910-ஆம் வருஷம் வந்த ஆலீச் காமெட் (Halley's Comet) என்ற வால் வெள்ளி எவ்வளவோ புது அறிவை உலகத் தில் ஜோதி சொரூபமாய்க் கொட்டியதினால் தான் சென்ற முப்பது வருஷங்களில் மனித மூளை பல அற்புத ஆராய்ச்சிகளைச் செய்ய முடிந்தது. 1941 அல்லது 1942 ஆம் வருஷம் ஓர் வால்வெள்ளி நமக்குத் தென்படும். அது 2520 வருஷங்களுக் கொருமுறை இவ்வுலகில் தோன்றும். அதிவேகமாய்ப் பிரயாணஞ் செய்யும். அத்தூமகேது எல்லா உலகங்களையும் ஒரு தரம் சுற்றிவர அவ்வளவு காலம் பிடிக்கு மென்றால் உலகங்களின் ஆகாய அளவை கணக்கிடவும் முடியுமா ? கலியுகம் பிறந்த பொழுதோ, அல்லது ஒரு வருஷத்துக் கப்பாலோ அது தோன்றிய தென்றும், புத்தன் காலத்தில் திரும்பிவந்த தென் றும், இன்னம் ஒன்று அல்லது இரண்டு வருஷங்களில் அதன் மூன்றாம் தோற்றம் நடைபெறு மென்றும் இந்தியாவின் ரகசி யக்கிரந்தங்களில் வரையப்பட்டிருக்கிறது. அதன் முதல் தோற்றத்தால் ஜீவன் அல்லது சிவன் என்ற தத்துவ ஆராய்ச்சி உலகில் விசேஷமாக நடந்தது. அதன் இரண்டாம் தோற்றத்தால், கலி 2520-ஆம் வருஷத்திற் கப்பால் உடல் அல்லது விஷ்ணு என்ற தத்துவ ஆராய்ச்சி உலகில் விசேஷமாய் நடைபெற்றுத் திரு மூர்த்தி களின் லயஸ்தானம் உணர்ந்து பிரும்ம துல்யமடைந்து மனிதன் அதீத காயகல்ப மென்ற யோகமுறையால் அழிவில்லாமல் இம்மண்ணுலகிலேயே சாஸ்வதத்தை அடையும் அற்புதம் நடைபெறும். 2520 என்பது சுக்கிரனின் எண். அதை ஒன்று முதல் ஒன்பது வரையிலுள்ள மூல எண் களைதினால் வகுத்தாலும் மிச்சம் வராது. சுக்கிரன் அசுரகுரு. அவனிடம் தான் ஜீவ மந்திரம் இருக்கிறது. ஜீவ மந் திரம் மனித மூளைக்கு எட்டவே, பசி, பிணி, வெறுப்பு, முதலிய துன்பங்கள் போய், அவற்றால் உண்டாகும் சாவும் ஒழிந்து, கேவலம் மிருகத் தன்மையை ஓட்டி அக்ஞான சிருஷ்டி முறைபோய், பிரும்மக்ஞானம் அடங்கிய பிரும்ம வித்து கிளம்பி இப் பூமியையும் அதன்மேல் நட மாடும் மனிதர்களையும் சாஸ்வதமாய்ச் செய்யும் காக்ஷியை வெகு சீக்கிரம் நாம் பார்க்கலாம்.

தபால்காரன்

[ய. மகாலிங்க சாஸ்திரி, எம்.ஏ., பி.எல்., அண்ணாமலை நகர்]

இவ்வுலகில் பால்காரனையும் தபால்காரனையும் "வந்தானோ, வந்தானோ" என்று எட்டி எட்டிப் பார்த்து, ஏணி வைத்துப் பார்த்து ஏங்கி நிற்காதவர்கள் இரார். இதில் பால்காரன் கட்டளைக்கு உள்பட்டவனாகையால், நேரம் கழித்து வந்தால் நம் கடுங் கோபத்திற்குப் பாத்திரனாகிறான். ஆனால் தபால்காரனை நாம் கோபித்துக் கொள்ளமுடியாது. அவன் சர்க்கார் சேவகன். நம் ஆக்ஞைக்கு உட்பட்டவனல்ல. மேலும், பால்காரன் பால் கொண்டு வராவிட்டால் அவனைத் திட்டலாம், அவன் கணக்கைத் தீர்த்துவிட்டு வேறு வாடிக்கை அமர்த்திக் கொள்ளலாம். தபால்காரன் தபால் கொண்டு வராவிடில் அவனை எப்படிக் கோபித்துக் கொள்வது? தன் அதிர்ஷ்டத்தையோ, தன்னையோ, தன் பந்துமித்திரர்களையோ நொந்து கொள்ளலாமே யொழிய, அவனை "ஒன்றும் கிடையாதா நமக்கு?" என்று ஒருதரம் கேட்பதற்குமேல் இரண்டாவது தடவை கேட்பதுகூட அனுசிதமாகும். சிலருக்குப் பால் ராசி இருப்பதுபோல சிலருக்கே தபால் ராசியும் இருக்கிறது. எல்லோருக்கும் வீட்டில் மாடு கறக்கிறதா? கறக்கிற மாடுகள்கூட சில மகராஜிகள் அதிர்ஷ்டத்தால் பால் வற்றிப்போய் விடுகின்றன. இவ்விதமே தபாலை எதிர் பார்ப்பவருக்கெல்லாம் தபால் வந்து விடுகிறதா? இல்லவே இல்லை. நான் ரொம்ப தபால் ராசியில்லாதவன். பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரால் ஜனங்களுக்கு அளிக்கப்பட்ட பெருங்கொடையான இந்தத் தபால் போக்குவரத்திலாகாவை முற்றிலும் கௌரவிக்கும் நோக்கமுடைய நான் வரும் தபால்களுக்குக் கிரமமாகத்தான் பதில் எழுதிக் கொண்டிருக்கிறேன். ஆனால் நான் எழுதும் தபால்களுக்கு நூற்றுக்கு ஐந்து வீதம்கூடப் பதில் கிடைப்பதில்லை. இப்படியிருந்தும் பிரதிதினமும் காலை ஏழரை மணிக்குப் பையனைத் தபாலாபீஸிற்கு அனுப்பும் வழக்கத்தை விட முடியவில்லை. தபால்காரன் வரப் பத்துமணியாகும். அதற்கு முன் வெளியே புறப்பட வேண்டியிருந்தால் என்ன செய்கிறது? முக்யமான தபால் வரத்துகள் இருந்தால் முன்னமேயே தெரிந்து கொள்வதில் பயனுண்டு. 'எவ்வளவோ விஷயங்களை ஆச்ரயித்துக் கடிதங்கள் போட்டிருக்கிறோமே. அவைகளுக்குப் பிரத்யுத்தரம் ஒன்று இரண்டு கடைசியில் இன்று வந்தே தீரவேண்டும்.' என்று இவ்விதமெல்லாம் ஆலோசித்து, காலை ஏழரை மணிமுதல் 8 மணிவரை வேறு வேலை ஓடாமல் தபாலாபீஸுக்கு அனுப்பிய பையனை எதிர் பார்த்திருப்பேன். பையன் தபால் ஒன்றும் இல்லாததால் வேறு ஜோலிகளைக் கவனித்துவிட்டுச் சற்று தாமதமாகவே வீடுவந்து சேருவான்.

"என்னடா, ஏதாவது உண்டா?"

"இருந்தால் உடனே வந்திருக்க மாட்டேனா. இல்லாததினால் சற்று—"

"அடே அதையெல்லாம் உன்னை யார் கேட்டது? தபால் உண்டா, இல்லையா என்று கேட்டால், கேட்டதற்குப் பதில் இல்லை"—

"அதுதான் இல்லை என்று சொன்னேனே."

"எங்கே இல்லையென்று சொன்னாய். உன் கதையெல்லாம் வளர்க்கிறாயே ஒழிய, இல்லை யென்று ஒரு வார்த்தையாகச் சொல்லமாட்டேன் என்கிறாயே."

"இல்லை, இல்லை, ஒரு தபாலும் கிடையாது. இப்போது சொல்லி விட்டேன்."

"போ. வெகு புத்திசாலி—வண்டா, அந்த சாஸ்திரி, ஐம்பது ரூபாய் கடன்காரன், அவனும் பதில் எழுதவில்லையா? எவ்வளவு கடுமையாய் எழுதினாலும் அவனுக்கு ரோஷம் இல்லையே. ஏது, வியாஜ்ய

வியவகாரங்களுக்குப் போக வேண்டா மென்றால் முடியாது போலிருக்கிறது."

"கடுமையாய் எழுதினதால்தான் பதில் இல்லைபோல் இருக்கிறது. இந்தக் காலத்தில் வரவேண்டிய பணத்தைக் கையில் காலில் விழுந்து, நல்ல வார்த்தை சொல்லி படிக்குப் பாதியாக வல்லவா வசூலிக்க வேண்டியிருக்கிறது."

"நாம் கொடுக்க வேண்டிய இடத்தில் அப்படியில்லையே. நமக்கு ராத்தூக்கம் வர மாட்டேன் என்கிறதே."

"அதற்கென்ன செய்வது. நீங்களும் மற்றவர்கள் போலிருந்தால் சரியாய்ப் போய்விடும்."

"அதிருக்கட்டும், இந்தப் பாப்பாரப் பயல் ஊருக்குப் போனவுடன் அங்கிருக்கிற விருத்தாந்தம் எல்லாவற்றிற்கும் தபால் போடுவதாகச் சொன்னானே. அவனும் பதில் போடவில்லையா?"

"அவன் ஏன் போடுகிறான். இங்கே பேசினால் இந்தப்பக்கம், அங்கே போனால் அந்தப்பக்கம். அவனுக்கு வெகு அக்கரையோ, உங்களுக்கு லெட்டர் போட வேண்டுமென்று?"

"ஆர். பி. ஐயரை, நான் பேட்டி கண்டு, என் பரிதாபங்களைத் தெரிவித்துக் கொண்டபோது வெகு பரிவுடன், 'எனக்கு அடுத்தவாரம் ஞாபகப்படுத்து, உடனே உன் சம்பந்தமாய் வேண்டியவைகளைச் செய்கிறேன்' என்று சொன்னாரே. ஞாபகப்படுத்த லெட்டர் ஒன்று, இரண்டு மூன்று ஆகிவிட்டது, ஒருவாரம் கடந்து பல மாதங்களாயினும் பேச்சுமூச்சுக் காணோம். இப்படி ஆசை வார்த்தை காட்டி, ஏழைகளை வஞ்சகம் செய்வானேன்."

"இதுதான் பெரிய மனுஷாளுக்கு லக்ஷணம். தெரியாதா உங்களுக்கு? அது கிடக்கட்டும். ஒரு குமாஸ்தாப் பயல் செய்த போக்கிரித்தனத்தை மேல் அதிகாரிக்குத் தெரிவித்தீர்களே, ஆச்வாஸத்திற்கு ஒரு பதிலாவது எழுதினானா அந்த அதிகாரி? நமக்கானால் இப்படியிருக்க ஒரு நிமிஷம் மனஸாகுமா?

"மனஸாகவாவது. எனக்குக் கீழ் வேலை செய்பவன் இவ்விதமாக மோசம் செய்ததாய்த் தெரிந்திருந்தால் சுட்டிருக்க மாட்டேனா? பிறரை மோசம் செய்வது போல் அதிகாரியை மோசம் செய்த பிறகு தான் அவனுக்கு சூடு உரைக்கும். பிறருக்கு வரும் விபத்து, பொருள் நஷ்டம், மானஹானி இவைகளைத் தன்னுடையதாக நினைக்கும் சாதுக்கள் இக்கலியுகத்தில் எங்கு இருக்கிறார்கள்? அவனவன் தலையில் இடித்தபிறகு தான் குனிந்து போவான். அது வரையில் விறைப்புதான்.

"இதெல்லாம் இருக்கட்டும். நாராயணசாமி என்ன சொல்லிவிட்டுப் போனான். நாலு நாள் இங்கு தங்கி, வரனை நிச்சயம் செய்ய "உங்களை முன்னிட்டுக் கொண்டுதான் எல்லாம் செய்ய வேண்டு"மென்று உபசார வார்த்தைகள் பேசிவிட்டு, காரியம் முடித்துக் கொண்ட பிறகு, என் ஞாபகமே இல்லை. நிச்சய தாம்பூலம் நான் வந்து தான் வாங்க வேண்டுமென்றும் கடிதம் போடுவதாய்ச் சொன்னானே. வெள்ளிக் கிழமை தாண்டி விட்டது. ஆனி மாதம் நாலு நாள் பாக்கி. நிச்சய தாம்பூலம் நடக்காமலா இருக்கும்? கலியாணக் கடிதமும் போடுகிறானோ இல்லையோ?......

'இல்லாத பழைய உறவெல்லாம் கொண்டாடிக் கொண்டு வெகு சொந்தமாய் நாலு நாள் இங்கு குடும்பத்துடன் 'காம்ப்' போட்டானே, அந்த சாப்பாடு ஜரிக்குமுன் நம்மை மறந்துவிட்டான். ஒரு காலணாக் கடிதம் கூடக் கிடையாது."

"முக்காலணா"

"சரி, முக்காலணா, அந்த முக்காலணா பொறமாட்டேனா நான்? எல்லாம் சுயகாரியப் புலி, இது எல்லாவற்றையும்விட, அநியாயம் ராம சுப்பையர் செய்வதுதான்" என் புஸ்தகத்தை அச்சுப் போடுவதாக வாங்கிக்கொண்டு எவ்வளவு நாளாகிறது? கையெழுத்துப் பிரதி இருக்கிறதோ, அதையும் தொலைத்து விட்டானோ? எத்தனை தபால் தண்டம் தொலைக்கிறது? நீர் விசாரமாய் இருக்கிறானே."

"இருக்கானோ, போய் விட்டானோ. அதைத்தான் யார் கண்டார்கள்?"

"இல்லாமல் இவனுக் கென்ன கேடு வரப்போகிறது? நேற்றுக்கூட சில புது பிரசுரங்களை வெளியிட்டு, பேபரில் 'அட்

வர்ட்டைஸ் மெண்ட்' கொடுத்திருக்கிருன்."

"இந்த கௌரவத்தை இவனுக்குக் கொடுத்து விடுவதா என்று அசூயையிருக்கும்."

"வேண்டாமே, என் புத்தகத்தை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடு என்று ஒருவருஷமாய் எழுதிக் கொண்டிருக்கிறேன்" அதற்கும் பதிலைக் காணோமே. ஏதாவது ஒரு வழிபோக வேண்டாமா. ஒரு ஆங்கிலேயன் 'பிஸினஸ்' விஷயத்தில் இப்படி நடப்பானு? நம் இந்தியருக்கு ஸ்வராஜயம் வேண்டுமென்ருல் எப்படி வரும்? வியவகார நாணயம், பிறர் சுதந்திரத்தை மதிப்பது, வேற்றுமை நோக்கத்திற் கிடமளிப்பது முதலிய நாகரீக குணங்களை ஆயிரத்திற்கு ஒருவனிடத்தில்கூடக் காணோமே. சுயநலம், குறுகிய எண்ணம், கபடவிருத்தி, கஞ்சத்தனம், கடின சித்தம், பிறரைச்சிறுமைப்படுத்தல், தன்னுயர்வைப்பற் பலவகையில் உணர்த்த ஆத்திரப்படுதல், சரஸமில்லாமல் அகம்பாவத்தாலும், வறட்டுத் தனத்தாலும் தன்னைச்சுற்றி யிருப்பவரை வெறுப்புறச் செய்தல், இவ்வித அஸுரத்தனம் அல்லவா மண்டியிருக்கிறது எங்கும் நம்மடவர்களிடத்தில். நம் பெரியோர்கள் முறையும் அழிந்து, அங்கியர்கள் முறையும் அனுஷ்டானத்திற்கு வராமல் நாம் திரிசங்கு ஸ்வர்க்கத்தில் உழல்கின்றேம்."

"இதையெல்லாம் சொல்லப் போவானேன் உங்களுக்குக் கோதண்டராவ் உங்கள் 'ஆர்ட்டிகிளை'ப் பார்த்துவிட்டு, தன் அபிப்ராயத்திற்கு அனுகுணமாய் இருக்கிறதென்று வெகு குதூகலத்துடன் முதலில் லெட்டர் எழுதின பேர்வழி, பின்பு உங்கள் புத்தகங்களை அவருக்கு அனுப்பியபோது பெற்றுக்கொண்டதாகக்கூட லெட்டர் எழுதவில்லையே. அதற்கென்ன சொல்லுகிறீர்கள்?"

"அதுவா, சொல்லுகிறேன்," கேள். கோதண்டராவ், என் எழுத்திலிருந்து என்னைப் பெரியவனுய் மதித்து முதலில் லெட்டர் எழுதிவிட்டார். ஆனல் நான் எழுதிய பதிலிலிருந்து என்னைச் சிறியவனென்று தெரிந்துகொண்டு இவனிடம் கடிதப் போக்குவரத்து உசிதமில்லை என்று நிறுத்திக்கொண்டார் போலும்."

"சிறுமையும் பெருமையும் இங்கு கவனிக்க வேண்டியவை அல்லவே. உங்களுடைய புஸ்தகங்களைப்பார்த்துச் சந்தோஷப்பட்டு மரியாதைக்கு ஒரு கடிதம் எழுதவேண்டாமா? இவர் படித்த மேதாவி யென்றுதானே புஸ்தகங்களைப் பார்வையிட அனுப்பினீர்கள்!"

"அப்பா, உலகமறியாதவனே,

"பிக்ஷு கக்ஷா விநிக்ஷிப்த் கிமிக்ஷுர் நீரஸோபவேத்' என்று நம் பெரியோர்கள் சொன்னது மலையேறிப் பொய்விட்டது. பிச்சைக்காரன் கைக் கரும்பை நாணல் என்றே இக்காலத்தில் மதிப்பார்கள்.

"நேபாலக்ஷிதி பால பால பதித்: பங் கோபி கஸ்தூரிகா" என்றபடி அந்தஸ் துள்ளவன், பணக்காரன், பெரிய அதிகாரி சேற்றைப் பூசிக்கொண்டு வெளியில் கிளம்பினுலும் கஸ்தூரி காதவழிக்கு வாசனை ஜமாய்க்கிறது. பார்த்தீர்களா 'என்றும் கட்டியம் கூறுவர் இக்காலத்தவர்... இதிருக்கட்டும். ஏன் என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிருய்? ஆக மொத்தத்தில் இன்று தபால் ஒன்றுமில்லை. அவ்வளவு தானே."

"ஆம், ஒன்றுமே கிடையாது."

"பாரதமணிகூட வரவில்லையா?"

"இல்லையே. மூன்று நான்று வாரங்களாகவே வரவில்லை. ஞாபகக் கடிதமும் எழுதியாகிவிட்டது—இரண்டு."

"நமக்குத்தான் வந்திருக்காது. அடுத்தாத்து விச்வனுதய்யரை விசாரித்துப் பார். அவருக்கு ஒருவேளை வந்திருக்கும். நம்மைப்போல் தபால் ராசி பூஜ்யமானவர் கிடைவே கிடையாது."

வியாஸ பூஜை நம்பருக்கு ஸ்ரீமான் வெங்கட்ரமணி அய்யர் என்னை ஒரு வியாஸம் எழுதும்படி உத்தரவிட்டார். வியாஸ பூஜைக்கும் இந்த மேற்கண்ட அக்கப்போர் வியாஸத்திற்கும் என்ன சம்பந்தம்? குலாம் காதருக்கும் கோகுலாஷ்டமிக்கும் சம்பந்தம் போல், தபால்காரனுக்கும் வியாச பூஜைக்கும் ஸம்பந்தம் விசித்

திரமாகவல்லவா இருக்கிறது என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். இதற்குப் பதில் சுருக்கமாய்த் தான் சொல்லப்போகிறேன். வியாஸர் வேதாந்த ஸூத்திரங்களை இயற்றினர். வேதாந்தத்தில் ஈச்வரனுக்கும் ஜீவராசிகளுக்கும் உள்ள சம்பந்தம் விசாரிக்கப்படுகிறது. ஈச்வரன் லோக ரக்ஷகனுனல், ஸர்வ வல்லமை உள்ளவனுனல், பக்ஷபாதமற்றவனுனல் ஜீவர்களில் சிலர் கஷ்டப்படுவதையும் நிர்விசாரமாகப் பார்த்துக் கொண்டிருப்பதேன்? விச்வ குணுதர்சத்தில் கிருசாணு சொல்லியபடி, "நாராயணே நிர்க்ருணீ," நாராயணனே ஈவிரக்கமற்றவன் என்று ஏன் சொல்லக் கூடாது? ஜீவர்களுக்குக் கர்மவினை பயனைக் கொடுப்பதா யிருப்பதால் ஈச்வரனை ஏன் ஒப்புக்கொள்ள வேண்டும்? பக்தர்களை ஈச்வரன் கர்ம வினையிலிருந்து விடுவிக்க முடியுமா, முடியாதா? பக்தன் எவ்வளவு கதறியும் ஈச்வரன் கண் திறந்து பார்க்காமல் இருந்து விடுகிறனே, இது நியாயமா? என்ற சந்தேகங்களுக்கு இவ்வியாஸத்தில் ஒருவாறு சமாதானம் கூறப்பட்டிருக்கிறது. ஈச்வரன் தபால்காரன் ஸ்தானத்தில் இருக்கிறன். தபால் உங்களுக்கு யாராவது போட்டால் தானுக அவன் கொண்டு வந்து கொடுப்பான். இல்லையேல் அவனிடம் கோபித்துக் கொள்வதில் என்ன பிரயோஜனம்? எந்த பைத்தியக்காரனு யிருந்தாலும் தபால் கொண்டு வாராததற்காகத் தபால்காரனைக் கோபித்துக்கொள்ள மாட்டான். தவிரவும் நல்ல சமாசாரம் கொண்டு வருவதும், கெட்ட சமாசாரம் கொண்டு வருவதும் தபால்காரனுடைய இஷ்டமில்லை. கெட்ட சமாசாரம் கொண்டு வந்ததற்காக தபால்காரனை நாம் திட்டுவதில்லை. நல்ல சமாசாரம் கொண்டு வந்தால் அவனுக்கு இனும் கொடுப்பதுண்டு. காரியம் கைகூடினுல் விநாயகருக்குக் கொழுக்கட்டை நிவேதனம் செய்வது போல், நம் கர்ம கதியையும், அதில் ஈச்வரனின் பொறுப்பையும் தபால்காரன் தன் தொழிலில் விளக்கிக் காட்டுவதால், வியாஸ பூஜை மலருக்கு தபால்காரனைப்பற்றி வியாசம் எழுதத் துணிந்தோம்.

வைடோ பெர்ரின்

TRADE ITL MARK

வைடமின் குறைவு, இரத்த மின்மை, பலஹீனம் முதலிய வற்றிற்கு

சிறந்த டானிக்

மிகவும் இனிமையானது. மால்ட் சத்தும், தேனும் சேர்த்துச் செய்யப் பட்டது. வைடமின்கள் ஏ, பி, டியும் அயமும் கொண்டது

கவர்ன்மெண்ட் இண்டஸ்ட்ரீயல் & டெஸ்டிங் லெபாரடரி

மல்லேஸ்வரம் :: பெங்களூர்

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் பெஸ்ட் & கோ.,

த. பெ. 63 :: மதராஸ்

ஸன்லைட்

உங்கள் குடும்பத்திற்கு
சந்தோஷ மளிக்கட்டும்



ஸன்லைட் உங்களுக்கு பரிசுத்தமளிக்கும்
பரிசுத்தத்தினால் ஆரோக்கியம் உண்டாகும்.



ஸன்லைட் சோப் உபயோகியுங்கள், இது உங்கள் வேலையைக் குறைக்கும். ஆடைகளைப் பாதுகாக்கும். ஸன்லைட் உபயோகித்தால் உங்கள் பணம் மிச்சமாகும். ஸன்லைட் சோப் உங்கள் குடும்பத்திற்கு ஆரோக்கியம், சுகம், பரிசுத்தம், ஆனந்தம் அளிக்கும்.

உண்மையான ஸன்லைட் இம்மாதிரி பெட்டிகளில்தான் விற்கப்பட்டு வருகிறது

LEVER BROTHERS (INDIA) LTD. S. 21-50

கடனும் அறனும்

[ஆர். பங்காருஸ்வாமி, பி.ஏ., பி.எல்.]

கடன் புரிவது அறம்; அது மறப்பது மறம். நம் முன்னோர்கள் கடனுக்கு அஞ்சினர். 'கடன் கொண்டார் நெஞ்சம்போல் கலங்கினன் இலங்கை வேந்தன்' என்ற கம்பன் வசனம் தெரியாதார் யார்?

கடனில் உரைவது கடமை. நன்றி மறந்தவர் கடனையும் மறப்பர். திரு. கோபாலகிருஷ்ண பாரதியார் பாடியது போல,

பல்லைக் காட்டிப் பணங்களை வாங்குவர்
பணத்தைத் திருப்பிக் கொடாமலே
[தூங்குவர்
அல்லும் பகலும் அலைந்தாலும் தந்திடார்
அளித்தவர் வாழும் தெருவிலும் வந்திடார்.

ஆபத்துக் காலத்தில் கடன் கொடுத்துதவும் நன்றியை 'உதவினோர் மனங்கன்றிட வொருவினை கருதிச் செய்பவனுக்கு' ஒரு நாளும் உய்வில்லை.

கடன் பொருள் உருவம் கொள்ள வேண்டுமென்பதில்லை. பிறப்பு உரிமைகள் என்பதுபோல் உடன்பிறந்த கடன்கள் சில உள. இவை எல்லாருக்கும் பொதுவாக அமைக்கப்பட்டன. தாய், தந்தை, மக்கள், அரசன்—இவர்கள் கடனைப் பற்றி பொன்முடியார் என்னும் பெண் புலவர் சுருங்கச் சொல்லியுள்ளார்.

ஈன்று புறந்தருதல் என்றலைக்கடனே
சான்றோனக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக்
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக் [கடனே
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக்
[கடனே.

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்னும் பழமொழியைத் தழுவியது செஞ்சோற்றுக் கடன் என்பது. இராமாயணத்தில் கும்பகர்ணனும் மஹாபாரதத்தில் கன்னனும் இக் கடன் புரிவதில் ஒப்புயர்வின்றி விளங்குகின்றனர். கும்பகர்ணனுக்கு இராவணன் செய்வது அக்கிரமம் என்று தெரிந்தும் அவன் பக்கம் சண்டை செய்து மாளுவது நலம் என்று எண்ணுகிறான். விபீஷணன் தனக்கு வாக்களித்த இராஜ்யத்தைத் தருவதாகச் சொல்லி இராமபிரானைச் சரண் அடையும்படி கேட்க அதற்கு இணங்கவில்லை. ஏன்? 'பொருதொழிற் குரியராகி ஒருத்தரின் முன்னஞ் சாதல் உண்டவர்க்குரிய தம்மா' என்கிறான். நெடுநாள் தன்னை வளர்த்த இராவணேச்வரனுக்கு அவன் உயிர் உரிமை. உயிரைக் கொடுத்தும் செஞ்சோற்றுக் கடன் புரிந்தே தீரவேண்டும். சூரியனைக் கண்ட பனிபோல் கும்பகர்ணனுடைய கொடிய செயல்கள் முழுவதும் இந்த ஒரு நற்குணத்தால் மறைந்து விடுகின்றன. இஃதே போல் அங்கர் பூபதியும் தாயார் அளித்த மகுடம் வெறுத்து 'உயிரனைய தோழற்காகச் செஞ்சோற்றுக் கடன்' கழிப்பதையே புகழாகவும், தருமமாகவும், கருமமாகவும் கொள்ளுகிறான்.

தன்னுடைய தேசத்திற்கு உயிரைக் கொடுத்தாவது கடன் தீர்த்துக்கொள்ளும் மஹான்களும் உளர். ஏனென்றால் தாய் போல் நம்மை ரக்ஷிக்கும் நம்முடைய தேசத்திற்கு நாம் கடன் பட்டவராகிறோம் மற்றெவ்வித கடனும் இதற்குப் பிறகு தான் என்று கருதுவோரும் உண்டு. நம்மைப் படைத் தளித்துக் காக்கும் கடவுளுக்கும் நாம் கடன் பட்டிருக்கிறோம். நமக்கு நன்மை செய்கிறவர்கள் ஒவ்வொருவருக்கும் கடன் பட்டிருக்கிறோம். மனிதர் வாழ்க்கையை நன்கு ஆலோசித்துப் பார்க்குமிடத்து அது ஒரு கடன் மூட்டை என்றே சொல்ல வேண்டும். ஏழை எளியவர் வெட்ட வெய்யிலில் நெற்றித் தண்ணீர் நிலத்தில் விழ உழைத்துச் செய்கிற வேலையைப்பலருக்கு சாப்பிடவும் தூங்கவும் உல்லாசமாக இருக்கவும் இடமாகிறது. மன்னுதி மன்னனும் இவர்களுக்குக் கடன்பட்டவனாகிறான்.

ஒவ்வொருவரும் தம்முடைய கடனைப் புரிந்துவருவரேல் இவ்வுலகம் புனிதமடைந்து தேவருலகம் போல் இலங்குமென்பது திண்ணம்.

அன்பு!

[கு. ப. வேங்கடாசலம், திருநெல்வேலி]

சாந்தம் பொறுமையினல்—நாம்
சகத்தை வென்றிடுவோம்
காந்தியின் பொன்மொழியின்—உண்மை
காண விழைந்திடுவோம். 1

எங்கு நாம் சென்ருலும்—அன்பின்
இன்னிசை பாடிடுவோம்
பொங்கும் அஹிம்சையினல்—பூமியில்
போக்குவோம் துன்பமெல்லாம். 2

பச்சைக் குழந்தையுளம்—நம்மிடம்
பண்பா யமைந்துவிட்டால்
நிச்சயம் பொன்னுலகம்!—துன்பம்
நீங்கிடும் சத்தியமே! 3

ஈனக் கவலைகளால்—நெஞ்சம்
இற்ற மானிடர்க்கு
தேனெத்த அன்புரையால்—அவர்க்குத்
தேறுதல் கூறிடுவோம். 4

நெஞ்சு பொறுக்காத—வசவால்
நைந்த மனத்தினராய்
கெஞ்சி பிச்சைகேட்கும்—வாழ்வின்
கேட்டையும் நீக்கிடுவோம். 5

அன்பு மொழிபேசி—உயிர்க்கு
அன்பு செயல்புரிந்தால்
அன்னை சக்திதேவி—நமது
அடிமை விலங்கொடிப்பாள். 6

குடும்பத் தலைவி

('ரஸிகன்')

பட்டணத்தில் முதல் முதல் நாங்கள் தங்கியது. பெரிய தெருவில் பழைய வீடு. கோயில் மண்டபங்கள் போல் வளைவு (கமான்) போட்ட கூடமும், கூரையைத் தாங்கின பனஞ்சாற்றுக்களும், ஜன்னல் என்ற சொரூபமே தெரியாத சிறிய அறைகளும் நடுக்கட்டில் உள்ள கிணறும் அதன் பழமையைப் பார்த்த மாத்திரத்திலேயே உணர்த்தின. அதற்குச் சொந்தக்காரரும் பழமையை யொட்டினவரே. அப்பொழுது அவருக்குச் சுமார் வயது 70 இருக்கலாம். லோகல் பண்டில் கண்டிராக்டராயிருந்து நன்ருய்ச் சம்பாதித்தவர். தடித்தடியாய்*நான்குபிள்ளைகள். எல்லோரும் இங்கிலீஷ் (முன்பின்) படித்தவர்கள். ஒருவனும் அவர் சம்பாத்தியத்தில் நான் கிலொன்றுகூடச் சம்பாதிப்பான் என்று சொல்லுவதற்கில்லை. ஆனால் அவருக்குக் கொஞ்சம் பேச்சில் பிரிய மென்ருலும், பையன்களுக்குப் பேச்சைத் தவிர வேறு விவகாரங்களுக்குப் பொழுதே யிருக்கிறதில்லை. அவர் கூடத்து ஊஞ்சலில் எண்ணெய் ஏறின முண்டைக் கட்டிக் கொண்டு, வழுக்கைத் தலையில் இருக்கும் 4 வெள்ளி மயிர் காற்றில் பறக்க வெற்றிலை பாக்கைக் கைபுரலில் இடித்துப் பல் போன வாயிலிட்டுக் கொண்டு அகப்பட்டவர்களை விடாமல், தான் சம்பாத்தியம் செய்த தந்திரங்களையும் எஞ்சினீரிங் டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தர்களின் மதியீனத்தையும், பேராசையையும் பற்றி விஸ்தரித்துப் புராணம் சொல்லுவார். பையன்களோ பழைய மாடி இடிந்து தலையில் விழுமோ என்ற பயம் பிறருக்குண்டாக, தினசரிப் பத்திரிகைகள், நகைச் சுவை ததும்பின வாரப்பத்திரிகைகள் முதலான வசதிகள் அதிகமாய் ஏற்படாத அந்தக் காலத்திலும்கூட உலகத்தைக் கொட்டிக் கொட்டி அளப்பார்கள். அதிவிருந்த ருசியில் தாயார் பழய சோற்றைப் பிசைந்து வைத்துக் கொண்டு சாப்பாட்டுக்குக் கூப்பிடுவது கூடக் காதில் விழுவதில்லை.

எங்கள் வீட்டுக் கட்டுப்பாட்டில் முணுக்கென்று சத்தம் செய்தால் பெருத்த தண்டனைக்குள்பட வேண்டியிருந்த எனக்கு இப்படி நாள் தோறும் இவர்கள் வாதிப்பது ஆச்சரியத்தைத் தந்தது. கொஞ்ச நாள் கவனித்தேன். அவர்கள் உலகம் வெகுசிறியதாகவே தோன்றியது. ஒருவன் தான் 'காம்பொஸிஷன்' நோட்டுப் புத்தகம் கொண்டு போகாததற்காக ஹெட்மாஸ்டரால் கண்டிக்கப்பட்டதற்கு அதை எலி தூக்கிக் கொண்டுபோய் விட்டதாகத் தந்திரமாய்ப் பதில் சொல்லி அவரை வாயை அடைத்து விட்ட விநோதத்தைப் பிரசுரிப்பான். உடனே அவன் அண்ணன்—உள்ளூர் உயர்தரக் கலாசாலையில் படிப்பதாகப் பாவனை பண்ணிக் கொண்டிருந்தவன்—'லைப்ரேரியனை' ஏமாற்றி எடுத்து வந்த புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்காமலே கொடுத்து விட்டதாக 'ரெஜிஸ்டரில்' பதிந்து விட்டதாகச் சொல்லித் தன் கௌரவத்தை வெளிப்படுத்துவான்.

இவர்களுக்குப் பெரியவர்களில் ஒருவன் வக்கீல் குமாஸ்தா, மற்றவன் முனிசிபல் பில்கலெக்டர். கிரமமாகவே குமாஸ்தாக்களைக் கண்டு வக்கீல்கள் பயப்படும் அந்த ஊரில், எங்கள் ஆசாமி பொருக்கி எடுத்த குமாஸ்தா. 'அபிடெவிட்' எழுதுவதிலும், பொய்ச் சாட்சி தயாரிப்பதி

(* உதாரணமாக, தன் கடைக்குட்டிக்குப் பித்தவாத ஜுரம் கண்டு, பிழைப்பதரிதாய் இருக்கும் தருணத்தில் தாகம் தாகம் என்று அவன் பறந்ததாயும், அதைச் சகிக்கமாட்டாதவளாய் நல்ல புளிப்பான மோர் அரைப்படி எடுத்து அவனுக்குக் கொடுத்ததாயும் அதைச் சாப்பிட்ட மாத்திரத்தில் சன்னி தெளிந்து போய் அவனுக்கு உடம்பு குணப்பட்டு விட்டதாயும் அவன் தாயார் சொல்லியிருக்கிருள்.)

னும், எதிரிக் கவசியமான 'ரிகார்டு'கள் கச்சேரியிலிருந்து மாயமாய் மறையும் படி செய்யும் கைலாகவத்திலும் இணையற்ற வன். சென்னையிலிருந்து வந்திருந்த வெகு பெரிய வக்கில் ஒருவர் கச்சேரியில் ஒருநாள் அவனைக் கண்ட மாத்திரத்தில், மூல ரோக பாதையால் முகத்தில் எள் ளும் கொள்ளும் வெடிக்கக் கக்ஷிக்காரன் மேல் விழுந்து குளறிக்கொண் டிருந்ததை நிறுத்திப் புன்சிரிப்புடன், 'என்ன, சுப் பிரமணியய்யர், சௌக்கியமா ? நீர் எதிர்க் கக்ஷிக்கு வக்காலத்து வாங்கவில்லையே ?' என்று நயமாகக் கேட்டதாக அவனே சொல்லிக்கொண்டான். ஆனால் இவ்வளவு பெரிய குமாஸ்தாவாயிருந்தாலும் அவன் தாயாருக்கு ஒரு சின்னக் குறை. அவன் 'இந்தா, பணம்' என்று தன் சம் பாத்தியமாக ஒரு செப்புச் செல்லிகூட கொண்டு வந்து கொடுத்துக் கண்டவ ளல்ல. 'அவன்செண்டுக்கும்,சோப்புக்கும், உடுப்புக்கும், வைப்புக்குந்தான் எல்லா இழவும் சரியாப் போரது, கட்டேலே போவான்!' என்று அடிக்கடி சலிப்புடன் அந்த அம்மை சொல்லக் கேட்டிருக் கிறேன். அதன் பொருள் வெகு நாள் வரையில் எனக்கு விளங்கவில்லை. இப்படி யிருந்தும், இந்தப் பிள்ளைக்குத்தான் ஆசா ரோபசாரம் ஜாஸ்தி. வயது முப்பதாகியும் அவன் கலியாணம் பண்ணிக்கொள்ள வில்லை. நல்ல நல்ல பெண்கள் வந்தும் 'இந் தப் பீடை யெல்லாம் எனக்கு வேண் டாம்' என்று மறுத்துவிட்டான். 'அப் ஸரஸ் தேவலோகத்திலிருந்து வந்துன்னு ஓம் பிள்ளையைக் கலியாணம் பண்ணிக் கொள்ளப் போரா' என்று கிழவர் அகமுடையாளைப் பார்த்து நெரடாகப் பேசுவார். ஆனால் அவர்கூட அவன் காதில் பட இரைந்து சொல்வதில்லை. ராத்திரி 10 மணிக்கு அவன் 'டிராமாவோ' 'சர்க்கசோ' இன்னும் எதுவோ பார்த்து விட்டு வருமளவும் அவன் தமயன் சம்சா ரம், பாவம், கண் விழித்துக்கொண்டு பட் டினியாய் உட்கார்ந்திருந்து அவனுக்குச் சோறு போடவேணும்.

நாள் தவறாமல் இப்படி நடப்பதைப் பார்த்து ஏதாவதொரு நாள் தமையன், 'தினம் என்ன டிராமா ?' காலா காலத்தில் வந்து சோத்தைத் திங்கப்படாதா ? என் றால் வந்து விடும் ஆபத்து. குமாஸ்தா தனக்குக் கௌரவஹானி ஏற்பட்டதாக நினைத்துச் சோறுவேண்டாமென்று சொல் லிப் படுத்துக்கொள்ளுவான். கிழவி ஆத் திரத்தோடு பாய்ந்து, "ஆமடா, பொண் டாட்டியாத்தே பெரியாத்தே. ராணி மங் கம்மாளோல்லியோ, கண் விழிக்கலாமோ! எங் கட்டை சந்திலே நிற்கிறது. கேட்பா ரைக் காணோம். நீ சம்பாதிக்கிறேங்கிற திமிருன்னு உன்னை இப்படிச் சொல் லச் சொல்ரது!" என்றுபொரி பொரிய ஆரம்பித்துவிடுவாள். கிழவர் ஊஞ்ச லில் உட்கார்ந்தபடி சத்தமில்லா மல் சிரிப்பார். பில் கலெக்டரோ பக லில் வீடுவீடாய் ஏறிச் சுமார் 30 மைல் நடந்த அசதியில் பசியாறக்கூட மனமில் லாமல் கிணற்றிலிருந்து ஒரு சொம்புத் தண்ணீரை இழுத்துக் குடித்துவிட்டுப் பாயைத் திண்ணையில் பரப்பிக் கீழே படுப் பதுதான் தாமதம், குறட்டை விடுவான். இதுகண்டதும் அவன் தாயார் அவன் சட்டைப் பைகளை ஆராய்ந்து, அரைக்கால் ரூபாயும், கால் ரூபாயுமாய்ச் சுமார் இர ண்டு ரூபாய்க்குக் குறையாமல் இருக்கும் சில்லறையை எடுத்துக் கணக்குப்பண்ணி, இரண்டேகாலணா மட்டும் (இரண்டணா காலையில் இட்டலி காப்பிக்கும், காலணா பொடிக்கும்) பையிலேயே வைத்து விட் டுப் பாக்கியைப் பத்திரப்படுத்தி, நாட்டுப் பெண்ணை, 'வேணுமானா திங்கட்டும், இல் லாபோனா விளக்கணைக்கலாம். மண்ணெண் ணெய் கிணத்தில் ஊரல்லை' என்று அதட்டிவிட்டுப் படுக்கப் போவாள்.

'பில் கலெக்டரு'க்குத் தினம் இரண்டு ரூபாய் எப்படி வரும்படி என்று கொஞ்ச காலங் கழித்து அவன் ஒரு தகராறில் மாட்டிக் கொண்டபோது தெரியவந்தது. வரி கொடுக்க வேண்டியவர்களைக் கடுமைப் படுத்துவான். 'ஜப்தி', 'வாரண்டு' என்று சிவப்புக் காகிதங்களையும், மஞ்சள் காகிதங் களையும் அவர்கள் கண்முன் வீசுவான். 'இருக்கட்டும், சாமிநாதய்யர், வரி எங்கே போறது ; இந்த மாதம் ரொம்ப செலவு. அடுத்தமாதம் ஆகட்டும்' என்று அவர்கள்

சொல்லிக்கொண்டே கையைப் பிடித்துக் குலுக்குவதுபோல, 2 அணு, 4 அணுவை அழுத்துவார்கள். 'என்ன போங்கோ, நாங்கள் படற கஷ்டம் உங்களுக்குத் தெரியறதில்லே. அந்தச் சேர்மன் குட்டிச்சுவரிருக்கே, செக்ரெட்டரி பேச்சைக் கேட்டுக் கொண்டு ஆடறது; அந்த பகாசுரனுக்கு எவ்வளவு கொட்டிக்கொண்டாலும் போறதில்லே. ஆபீசில் ஆளேக்காண வேண்டியதுதான் தாமசம். கருடசேவை யாட்டமா கையை நீட்டறான்,' என்று அவனூறு சொல்லிக்கொண்டே 'பில்'லின் பின்புறத்தில், 'ஆசாமி ஆஜரில்லே' என்ற நிஜமான 'எண்டார்சுமெண்டு' எழுதி யாராவது ஒரு தேவதத்தனின் கையெழுத்தை வாங்கிக் கொண்டு போய்விடுவான். ஆனுல் யாராவது சிலர் வரிப்பணம் கொடுத்துவிட்டால் அதைத் தவருமல் ஆபீசில் சேர்த்துக் கொண்டிருந்தான்.

இப்படி வெகுகாலம் சம்பாதித்தும், அவன் கையில் காலணு மிச்சமில்லே. (அதன் காரணத்தை மேலே கண்டிருக்கிறோமல்லவா?) அவன் மனைவி பார்த்தாள். வசவும், திட்டும், அடியும் தவிர வேறொன்றும் காணுததால் ஒருநாள் யாருக்கும் சொல்லாமல் கிளம்பி ஊருக்குப் போய் விட்டாள். இது தெரிந்ததும் மாமனுரும், மாமியாரும் 'இந்த அடங்காப் பிடாரியைத் தள்ளிவிட்டு வேறு கலியாணம் பண்ணி மறு காரியம் பார்க்கிறது' என்று சபதம் கூறினுர்கள். பிள்ளையாண்டானே, 'இவர்களுக்கென்ன பைத்தியம்! உச்சி வெயில் வீண் போகாமல் தலையிலேந்தி வழுக்கை விழுந்த எனக்கு யார் பெண் கொடுப்பார்கள்?' என்று ஏங்கினுன். ஆபீஸ் சம்பந்தமான வேலையிருப்பதால் தஞ்சாவூர்வரையில் போய்வர வேண்டுமென்று சொல்லி, வேட்டகத்திற்குச் சென்ருன். ஸம்ஸாரம் கண்ணில் படவில்லே. மூளையிலேயே அறுத்தவிட்ட அவள் தமக்கை எதிர்பட்டாள். ஸாங்கோபாங்கமாய் ஏழுதலேமுறை அவன் முன்னேர்களே நிந்தித்து, தங்கள் குடும்பத்தின் பிரதாபத்தை வர்ணித்து, 'கொரங்கு கையில் பூமாலேயைக் கொடுத்தாப்பலே ஒங்கம்மா மகராஜிண்டே என் தானந்தரமான கொழுந்தையைக் கொண்டு தள்ளினனே அந்தப்பாவி' என்று மரியாதையாய்த் தன் தகப்பனுரையும் போற்றி, 'செத்தாலும் சாகட்டும், அறுத்தாலும் அறுக்கட்டும், இம்மே ஒங்க வாசவழி அவ வரமாட்டா,' என்ற தீர்மானம் வைத்து சாமிநாதய்யரை அடிக்காத தோஷமாய் உதறிவிட்டு உள்ளே சென்ருள். அவன் இடி யிடித்தாப்போல் திண்ணையில் நாலுநாழி உட்கார்ந்து விட்டுப் பல் நனைக்காமல் ஊர்வந்து சேர்ந்தான்.

அன்று முதல் ஏதோ தீவிரமான யோசனையில் ஆழ்ந்தவன்போல் காணப்பட்டான். அவனைப்போன்ற சில்லறை சிப்பந்திகள், வரி வசூல் வரவரக் குறைவது கண்டு, 'சோம்பேறித்தனமாய் திரிந்தால் பணம் எப்படிக் கிளம்பும்?' என்று கோபமாய் மானேஜர் ஏசுவதிலிருந்து அந்தக் கவலேதான் போலிருக்கிறது என்று ஊகித்தார்கள். ஆயினும், அவன் சுபாவத்தில் முசுடு என்ற பேர் எடுத்திருந்ததால், ஒருவரும் அவனே நெருங்கிக் கேட்கவில்லே.

இப்படி 6 மாதம் கடந்தபிறகு ஒருநாள் காலேயில் குதிரைவண்டி வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து 2 நாள் வெளியூர் சென்றிருந்த ஸ்வாமிநாதனும், அவன் ஸம்ஸாரமும் இறங்கினுர்கள். வண்டிக்காரன் ஒரு பெரிய பெட்டியையும் ஒரு பழக்கூடையையும் எடுத்து உள்ளே கொண்டு வைத்தான். ஸ்வாமிநாதன் தாயார், நாட்டுப்பெண் போனதுபோல் சந்தடியில்லாமல் திரும்பியதைப் பார்த்துச் சற்றுத் திகைத்தாள். அந்தப் பெண்ணே சர்ரென்று உள்ளே சென்ருள். ஏதோ துடுக்காகச் சொல்ல வாயெடுத்த கிழவி, அவள் கழுத்தில் சுமார் 600 ரூபா பொறுமானமுள்ள காசுமாலே மின்னுவதையும், தன் பிள்ளேயின் பார்வையில் புதிதான ஒரு கடுமையிருப்பதையும் கண்டு சும்மாயிருந்துவிட்டாள். கிழவரோ ஊஞ்சலிலிருந்தபடியே நாட்டுப் பெண் கொண்டு வந்த வெண்ணெய்ச் சீடையைப் பல் போன ஈறுகள் தேயக் கடித்து சப்தம் போடாமல் சிரித்தார்.

சில நாட்களுக்கெல்லாம் ஒரு நாள் ஸ்வாமிநாதன் வழக்கம்போல் வெளியில் போகாமல் காலையில் திண்ணையில் உட்கார்ந்தபடியே அம்மாவைக் காப்பி கொண்டுவரச் சொன்னான். இந்த அபூர்வ சம்பவத்தைக் கண்டு ஒன்றும் புரியாதவளாய், 'ஏண்டாப்பா, கச்சேரிக்குப் போகலையோ, என்றாள். '6 மாஸம் ஸஸ்பெண்டு' என்று நிதானமாய்ப் பதில் சொல்லித் திண்ணையில் அழகாய் காலை நீட்டிப் படுத்துக்கொண்டான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த கிழவர் தந்திரமாய் வெளியே சென்று விசாரித்ததில், "முனிசிபல் செக்ரெட்டரி 3 மாதம் லீவு போட்டிருப்பதாகவும், அவருக்காக ஆக்டிங் பார்க்கும் மானேஜர் முனிசிபாலிட்டி ஏற்பட்ட நாளாய் இல்லாத வழக்கமாய் வரி பாக்கிக்கு அநேக ஜனங்கள் பேரில் கோர்ட்டில் தாவா செய்யும்படி உத்திரவிட்டதாகவும், 'லாயர் நோட்டீஸ்' கிடைத்ததும் இவர்களில் பலர் பணம் ஸ்வாமிநாதய்யர் மூலம் கட்டிவிட்டதாகத் தெரிவித்துக்கொண்டதாயும், அதன்பேரில் அந்த தொகைகளை அவர் சொந்தத்துக்கு உபயோகப்படுத்தி விட்டார் என்ற சந்தேகத்தால் அவரை 6 மாதம் 'ஸஸ்பெண்டு' செய்திருப்பதாகவும் தெரிந்தது. இதைக் கேட்டதும் கிழவிக்குத் திடுக்கிட்டது. ரோஜு வேலைக்குப் போய்ப் பிழைக்கும் தன் சம்பந்தி பெண்ணுக்கு 600 ரூபா காசுமாலை வாங்கிப் போட்டிருப்பார் என்று அவள் ஒரு போதும் நம்பவேயில்லை. ஆனால் அந்த சந்தேகங்களையெல்லாம் வெளிக்காட்டாமல், 'அந்த நாசமாப் போற மானேஜர் நம்ம ஸாமிநாதன் மேலே எப்போதும் கறு, கறுன்றுதானே இருந்தான். அவன் இதெல்லாம் கல்பனை பண்ணிருக்கணும்' என்று தீர்க்கமாய்ச் சொன்னாள். 'அதெல்லாம்பற்றிப் பேசி என்ன பிரயோசனம்? கேசு போட்டுட்டா பதில் சொல்லியாகணமே, இல்லாபோனால் தண்டனையன்னா ஏற்படும், என்று அவள் கணவன் சொன்னதும் கிழவி நடுங்கினாள். உடனே தன் கழுத்திலிருந்த காரையை அடகுவைத்து ரூபா 100 கடன் வாங்கி இரண்டாவது பிள்ளையிடம் கொடுத்து 'யாராருக்கு வாமுட்டுப் போடணமோ போட்டு, மானக்கேடில்லாமல் பண்ணு' என்றாள். கிழவரும் சுவாமிநாதனும் ஒன்றும் காதில்போட்டுக்கொள்ளவில்லை. சுப்பிரமணியன் வில்லனல்லவா? முடுக்க வேண்டிய இடத்தில் முடுக்கினான். அதற்குள் காயமான செக்ரெடரியும் ரஜாவிலிருந்து திரும்பிவந்துவிட்டார். பிராதுகள் ருஜுவில்லை என்று வாபீஸ் வாங்கப்பட்டன. பெரு நெருப்புக்கு ஈரமேது? முனிசிபாலிட்டியில் பணம் வசூலிப்பதைவிட தள்ளுபடிதான் ஜாஸ்தியாயிருக்கும். சுவாமிநாதன் வழக்கம்போல் வேலை பார்க்க ஆரம்பித்தான். ஆனால் ஒன்று புதிதாய் ஏற்பட்டது. 6 மாதம் சுகமாக திண்ணையில் படுத்திருந்ததால் உடம்பு ஒரு சுற்றுப்பருத்து அதிகமாய் நடக்க இயலாமல், ஒரு சிறு ஒற்றை மாட்டுவண்டி வாங்கிக்கொண்டு சவாரி செய்ய ஆரம்பித்தான். அவன் சம்சாரம் வீட்டிற்கு நாட்டாண்மை வகிக்கத் தொடங்கினாள். கிழவியின் காரை மீட்காமல் முழுகிப்போய் விட்டது. கிழவர், 'வேணும் மொட்டச்சிக்கி' என்று வெற்றிலையைக் குதப்பிக்கொண்டே உல்லாசமாய்ச் சொல்லிக் காட்டினார்.

*ஜகத் குரு

[கா. சி. வேங்கடரமணி]

முதன்முதலில் உலகத்துக்குப் போதித்த ஆதி ஜகத்குரு ஸ்ரீ சங்கரர். மதம் கொந்தளித்துக்கொண்டிருக்கும் தருணத்தில் ஹிந்து மதத்தை ஆபத்தினின்றும் விடுவித்துக் காப்பாற்றிக் கொடுத்தவர் அவர்; அதன் கொள்கைகளை அலசி அலசிப் போதித்தவரும் அவரே. எங்கும் அக்ஞான இருள் மூடிக்கொண்டிருக்கும் காலத்தில், ஓர் உன்னத நோக்கத்துடன் உலகத்தைச் சீர்படுத்தவந்த அவதார புருஷன் அவர் என்று நாம் கருதுகிறோம். அவர் சிந்தனா சக்திக்கு எதிரே கிடையாது. கங்கையைப் பற்றியோ அல்லது காவேரியைப் பற்றியோ த்யானம் செய்வதால் என்ன பலனோ அதைப் போல் பன்மடங்கு கொண்டது அவரைப்பற்றிய நினைவு. ஏன், ஹிந்துக்கள் அரசியல் திட்ட அமைப்பிற்குக் கடைக்கால் ஊன்றிய மஹரிஷிகளைப்பற்றி தியானிப்பதைக் காட்டிலும் விசேஷம் நமது ஜகத்குருவைப் பற்றி தியானிப்பது. தன் வாழ்நாளில் அவர் சம்பாதித்தவைகளைக் காட்டிலும், உலகத்தொண்டு செய்வதற்கும், அறிவூட்டுவதற்கும் அவர் வைத்துப்போன அரிய விஷயங்களும், பெரிய ஸ்தாபனங்களும் மிகப் பெரியதாக விளங்குகின்றன. அவருடைய நற்செய்கைகளை மனிதன் மறக்காமல் இருக்கிறான் என்பதற்கு அத்தாட்சியாகப் பலநூற்றாண்டுகள் கழித்தும் இன்றும் அவர் ஏற்படுத்திய ஸ்தாபனங்கள், தங்கள் ஸர்வஜன அபீஷ்டமான மதசம்பந்தமான போதனா சக்தியில் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. அவை இன்று வேதாந்தத்திற்கும், கலாசாரத்திற்கும் இருப்பிடங்கள் போல் விளங்குகின்றன. அந்த ஸ்தாபனங்கள் தாம் இப்பொழுது ஹிந்து மதத்தின் ஒளிவீசும் வாசஸ்தலங்களாக இருக்கின்றன.

கிறிஸ்து பிறப்பதற்கு முன் மூன்றும் நூற்றாண்டு முதல் ஐந்து வம்சத்தரசர்களைப் போஷித்து வளர்த்த காவேரி டெல்டாப் பிரதேசத்தில் தான் இப்பேற்பட்ட ஸ்ரீகாம கோடி பீடம் இடம் பெற்றிருக்கிறது. தமிழ் கலாசாரத்துக்கும் நாகரீகத்துக்கும் இருப்பிடமான கும்பகோணத்தில்தான் ஸ்ரீ காமகோடி பீடம் அமைக்கப்பெற்றிருக்கிறது.

பண்டைக்கால நகரங்களுள் பெருமை வாய்ந்த காஞ்சீபுரத்தில் தான் முதன் முதல் மஹா சங்கரர் காமகோடி பீடத்தை ஸ்தாபித்தார். அங்கு ஓராயிரம் ஆண்டுகள் பதினேழாம் நூற்றாண்டின் கடைசி வரையில் ஸ்தாபனம் விருத்தியாய்க் கொண்டே வந்தது. ஆனால் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்தின் முன் பாகத்திலும், நிலையற்ற மொகலாயர்கள் மராத்தியர்கள் காலத்திலும் காஞ்சீபுரம் கடுமையான கர்னாடக யுத்தங்களுக்கு மத்தியஸ்தானமாக இருந்தது. அதற்குப்பிறகுதான் தஞ்சாவூர் ராஜாக்களின் கோரிக்கைகளின் பேரில் காமகோடி பீடம் நிரந்தரமாக காஞ்சீபுரத்திலிருந்து கும்பகோணத்திற்கு மாற்றப்பட்டது. அன்று முதல் காவேரி டெல்டாவின் அமைதியான விவசாயப் பிரதேசத்தில் பீடம் நன்றாக இருக்கிறது.

"காமகோடி பீடம்" என்பதற்கு "இச்சைகளின் முடிவுக்கு ஆஸனம்" என்று பொருள். அது தொண்டு, அன்பு, அறிவு இம் மூன்றும் கலந்த ஓர் சின்னம்—வாழ்க்கையின் தோற்றமாக அனுபவிக்கப்பட்டு, ஜீரணிக்கப்பட்டு, லாபம் அடையப்பட்டு வருகிறது. நமது தினசரி வாழ்க்கையில் சுயநலமற்ற செய்கை இருக்க வேண்டும், என்று அது வாதிக்கிறது. அறிவுதான் விமோசனத்தை அளிக்கக் கூடியது என்பது அதன் கருத்து. அவ்வறிவு தர்ம சாஸ்திர விதிப்படி காம்யார்த்த மில்லாமல் செய்யப்பட்ட செய்கைகளி லிருந்துதான் பிறக்கிறது.

* "பேப்பர் போட்ஸ்" என்னும் ஆங்கிலப் புத்தகத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

வலங்கிமான் டி. மு. கோர்ட்டு

S. C. No. 288/1940

S. முத்துஸாமி அய்யர்—வாதி

(1) சுப்பன் சேர்வை
(2) நீலமேகம் சேர்வை } பிரதிவாதிகள்

ஷை நெம்பர் வாதி வக்கீல் தெரிவிக்கிறதாவது.

ஷை வக்கீல் வாதியால் பிரதிவாதிகள் பேரில் பிருமிசரி நோட்டின்பேரில் தாவா செய்து அது விஷயமாய் 2-ம் பிரதிவாதியின் சம்மனை ஒட்டி சர்வு செய்ய மனு கொடுத்து நாளது 2-8-40ல் ஈரங்கி போட்டிருக்கிறது. அது விஷயமாய் ஆக்ஷேபனையிருந்தால் ஷை தேதியில் ஷை கோர்ட்டில் பகல் 10-மணிக்கு ஆஜருகி தெரிவித்துக் கொள்ளலாம்.

Kumbakonam
22-7-40. } C. S. Desikachariar,
Advocate for Plaintiff.

அறிக்கை.

"பாரதமணி"க்கு சந்தா தொகையை இன்னும் செலுத்தாதவர்களை, ஆகஸ்டு மாதம் 10-ம் தேதிக்குள் மணி ஆர்டர் மூலமாவது அல்லது செக் மூலமாவது அனுப்பிவிடும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம். அதற்குள் செலுத்தாதவர்களுக்கு ஆகஸ்டுமீ 11உ பாரதமணி முத்து வி. பி. பி. மூலமாக அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்

BOOKS FOR ALL

Books by K. S. Venkataramani

	Rs.A.
Jatadharan & other Stories	1 8
Paper Boats	1 0
Kandan the Patriot	2 0
Cat - guts, by Manjeri S. Iswaran	0 12
Love of Dust by Shankar Ram	3 0
India's Road to Socialism by K. Santanam M.L.A. (Cen.)	1 0
Three Men of Destiny by A. S. P. Iyer I.C.S.	3 0

Books by S. V. V.

Soap Bubbles	1 0
Much daughtered	1 0
A Holiday Trip	1 0

Svetaranya Ashrama Book–Shop,
295, Linghi Chetty Street,
G. T., MADRAS.

முத்துமாலை

பாரத மணியின் 26 முத்துகள் ஒன்றாக கோக்கப்பட்ட முதல் மூன்று மாலைகள் பைண்டு வால்யூம்களாகத் தயாராகி இருக்கின்றன. ஒவ்வொன்றின் விலையும் இரண்டே ரூபாய்தான். இன்றே உங்கள் மாலையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தேகத்தின் நெருப்புக்களை இச்சைதான் விறகு போட்டு எரியச் செய்கிறது. காம கோடி பீடம், எல்லா இச்சைகளையும் ஒழிக்க யத்தனிக்கிறது. ஆனால் செய் கைகளைக் கொஞ்சமும் மாறாமல் பழைய பலத்துடனும் சுகத்துடனும் இருக்கக் கூடியதாகச் செய்கிறது. ஏன், முடிவற்ற பிறப்பு—சாவு என்கிற செக்கில் ஆத் மாவை மாட்டிச் சிறைப்படுத்தும் சரீரத் தையே அது அழிக்கப் பாடுபடுகிறது.

மனிதன் மனம், அவன் மனோநிலை ஆகி யவற்றை ஒருங்கே சுருக்கமாக விளக்கிக் காட்டும் வார்த்தை 'காமகோடி பீடம்' என்பது. அது ஸ்வர்க்கத்தையும், பூமி யையும் ஒரே பார்வையில் பார்க்கிறது. இவ்விரண்டிற்கு மிடையிலுள்ள இடை வெளியை அது மறைக்கிறது. உற்பத்தி யின் எல்லா அம்சங்களுக்கும் அது பெய ரிடுகிறது; அவற்றுக்கு வழிகாட்டியாக வும் உதவுகிறது. அது ஓர் சக்திவாய்ந்த தத்துவம். வாழ்க்கையின் வேற்றுமைகளை அது ஒற்றுமைப் படுத்துகிறது. அது உலகத்தின் பல நீலகிரணங்களை ஓர் வெண் ணிறமுள்ள கிரணமாகச் சேர்க்கிறது. கண்ணுக்குத் தெரிந்ததும், தெரியாதது மான அறிவின் ஆஸனம் அதுவே. அது ஒவ்வொரு கனவையும் எண்ணத்தை யும் உருவெடுத்து வாழ்விலும், கருமங் களிலும் புகும்படி செய்கிறது.

விசாலமான நோக்கத்தை யுடையது அதன் மனம். "பிரதி பலனை அடைய வேண்டும்" என்கிற எண்ணமின்றிச் செய் யும் சேவைத் தவத்தின் ரக்கைகள்மேலி ருந்து, உங்களை உச்சிகளுக்குத் தூக்கிச் செல்லுகிறது. அவ்வுன்னத ஸ்தானங்களி லிருந்து நீங்கள் வெகு தூரத்திலிருந்து மங்கலாகக் காணப்படும் உண்மை ஆத்மா வின் உருவத்தைப் பார்க்கலாம்.

பூ உலகத்தில் காமகோடி பீடம் ஓர் கிடைப்பதற்கரிய இடம். சுமார் அறுபது தலைமுறைகளாக, அந்த ஸ்தானத்தை வகிக்கும் ஒவ்வொருவரும் ஓர் மஹா தத் வத்தை விளக்கிக் காட்டும் ஆசார்யாளாக வும், அத் தத்வத்தின் சின்னமாகவும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தினசரி கர்மங்களை சிரமம் பார்க்காமல் செய்துவந்தார்கள். அவர்கள் வாழ்க்கையும் பழக்கவழக்கங்களும் படாடோபமற்றவை. கலைகளை நன்கு கற்றறிந்தவர்கள். காருண்ய குணமுடையவர்கள். அமைதி யுள்ளவர் கள்; சுயநலமற்ற செய்கையை யுடையவர் கள். சுத்தமான வாழ்க்கையை யுடையவர் கள். இவ்வித குணங்களால் அவர்கள் காம கோடி பீடத்தின் பெருமையைக் காப் பாற்றி வந்தார்கள்.

ஒரு பிராமணனுக்கு இவ்வளவு குணங் களும் வேண்டி இருக்கின்றன. சுத்தமான யௌவனத்தி லிருக்கும் பிரும்மச்சாரி தான் காமகோடி பீடத்துக்கு அர்ஹதை யுள்ளவராகிறார். முன் பீடாதிபதியால் அவர் அந்தஸ்தானத்துக்குத் தேர்ந்தெடுக் கப்பட்ட உடன், அவர் ஆச்சார்ய ஸ்வாமி அல்லது ஜகத்குரு ஆகிறார். பிறகு அவ ருக்கு எல்லா ஹிந்துக்களும், அரசனுக் குச் செலுத்துவதைக் காட்டிலும் மேலாக காணிக்கை செலுத்துகிறார்கள்.

பீடம் ஏறியது முதல், முதல் ஐந்து வரு ஷங்கள் புதிய ஆச்சார்ய ஸ்வாமி கல்வி கற்க வும், பயிற்சி பெறவும் ஒதுக்கிவைக்கப்பட் டிருக்கிறது. அது உள்ளப் பூரிப்பை யளிக் கும் பிரதேசத்தில் ஆச்சார்ய ஸ்வாமி படித்து, ஆத்ம சிந்தனையில் ஈடுபடும் காலம். அப்பொழுது அவருக்குத் தென் னிந்தியாவிலுள்ள சில பிரபல ஸம்ஸ்க்ருத பண்டிதர்களின், உதவியும், காமாக்ஷியம் மனின் அருளும் கிடைக்கிறது. உலக ஆசிரியருக்கு வேண்டிய குணங்கள் அவ ருடைய உன்னத பதவியின் தனிமையா லும், அவர் தினசரி சந்திர மௌளீஸ்வர ஸ்வாமியை பூஜிப்பதாலும், தானாகவே பெருகுகின்றன.

தேவ பூஜையிலிருந்து ஓர் மஹா சக்தி பிறக்கிறது. பூஜையில் தொண்டு செய் வதே மனிதனை உன்னத ஸ்திதிக்குத் தூக்கி பரிசுத்தமாக்குகிறது. எனவே என் ஆசார்யஸ்வாமி, சுலபமாக, வித்தைக்கு இருப்பிடமாகவும், வாழ்க்கையின் சில முதல் வினாக்களுக்குப் பதில் கூறுபவராக வும் ஆனது ஆச்சரியப்படத்தக்க தல்ல. தாம் போதிக்கும் முறையை அவர்

அனுஷ்டிக்கிறார். அவருடைய வார்த்தைகளும் செய்கைகளும் கடைசி ஒற்றுமையான அத்வைதத்தில் சென்று நிற்கின்றன. ஆசார்ய ஸ்வாமியின் வாழ்க்கை படாடோபமற்றது. அப்பழுக்கில்லாதது. உன்னத நோக்கத்தை யுடையது. பகற் பொழுதில், கஷ்டப்படும் தொழிலாளிகளை விட அதிகமாகக் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார். அதிகாலையில் ஓடும் நீரில் ஸ்நானம் செய்கிறார். பிறகு சாந்தமான முற்பகலில் மூன்றுமணி நேரம், ஆஹ்னிகங்களுக்கும் ஆத்ம சிந்தனைக்கும் செலவாகின்றது. பிறகு மறுபடியும் ஸ்நானம் செய்துவிட்டு சந்திர மௌளீஸ்வாருக்குப் பூஜை செய்ய ஆரம்பிக்கிறார். காமகோடிபீடத்தின் ரஹஸ்யம்போலவும், சந்தோஷிப்பிக்கும் சக்திபோலவும், மஹா சங்கரரால் அபிஷேகம் செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட பிரகாசிக்கும் லிங்கந்தான் சந்திர மௌளீஸ்வரர். எனவே, சந்திர மௌளீஸ்வரரின் பூஜை பீடத்தின் ஆத்மா வென்றே சொல்லலாம். சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு மேற்பட்ட காலம் முதற் கொண்டு மனிதனின் பக்தி சளைப்பின்றி, சிக்கனம் பார்க்காமல், அபரிமிதமான உயர்ந்த மூலிகைகளையும், புஷ்பங்களையும், பாலையும் தேனையும், இன்னும் மற்றெல்லா உயர்ந்த வாசனைத் திரவியங்களையும் பிரகாசிக்கும் லிங்கத்தின் பாதங்களில் கொணர்ந்து சமர்ப்பித்திருக்கிறது. அது தான் ஓர் சிறந்த தியாகம். ஏனெனில், அது காம்யார்த்தத்தை யுத்தேசித்து செய்ததல்ல; சுயநலனுக்காகச் செய்ததும் அல்ல; அது பூரண்மான தியாகம்.

பூஜை இரண்டுமணி நேரத்துக் குறையாமல் ஆகும். சந்திர மௌளீஸ்வரரின் அபிஷேக தீர்த்தத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கும் பக்த கோடிகள் முன்னிலையில் வாத்ய கோஷத்துடன் பூஜை நடக்கும். அபிஷேக தீர்த்தம் கிடைத்தவர்களில் சிலருக்கு ஜகத்குருவின் செலவில் நல்ல போஜனமும் கிடைக்கும்.

சந்திர மௌளீஸ்வரரின் பூஜையின் ஒரு அங்கமாக இருக்கிறது என் ஆசாரிய ஸ்வாமியின் ஒருபொழுது விரதம். அவர் தன் போஜனத்துக்குப் போவதற்குள் சூரியன் மேற்கே சாய்ந்து விடுவான். போஜனம் முடிந்ததும் மறுபடியும் வேலை செய்ய ஆரம்பிக்கிறார். பிற்பகல் பல பாகங்களிலிருந்து வந்த தனவந்தர்களும், படித்தவர்களுமான சேவார்த்திகளை வரவேற்பதில் காலம் சென்றுவிடுகிறது. என்ன வரவேற்பு! என்ன அழகு! எல்லோரையும் சமமாகப்பாவித்துப் புன்முறுவலுடன் ஆசாரிய ஸ்வாமிகள் வரவேற்பதின் அழகே அழகு.

என் ஆசார்ய ஸ்வாமி, ராஜா போன்றவர் ஆனால் வணக்கம் உள்ளவர். கௌரவமானவர்; ஆனால் மரியாதையுள்ளவர். அவருடைய வதனத்தில் சங்கரரின் பெருமை ஆஸ்தானம் வகிக்கிறது. ஸூக்ஷ்மபுத்தியின் ஒளி அவர் நெற்றியில் பிரகாசிக்கிறது. அவர் ஓர் சிறந்த ஞானி. எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளும் சக்தி அவரிடத்திலிருக்கிறது. சிந்தனையிலீடுபடுபவர்களின் அறியும் சக்தியே சக்தி! பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ராஜீயவாதியின் தந்திரம் முதல், ஸோவியத் ரஷ்யாவில் உள்ள கஷ்டங்களுள்பட, நவீன ஜப்பானில் விவசாயத்தில் கையாளப்படும் விஞ்ஞான முறை முதல் பாரிஸ் நகரத்தில் உள்ள நாகரீகங்கள் வரையில் எல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும்.

என் ஆச்சார்ய ஸ்வாமி வேதாந்த தத்வ விசாரணைகளில் ஈடுபடுவதில் எப்பொழுதும் தயாராக இருப்பவர். ஸம்ஸ்கிருதத்தில் தைலதாரையாகச் சிரமமின்றிப் பேசும் திறமை வாய்ந்தவர். பிற்பகல் முழுதும் சொல்வாதம் தான். கலாசாலையிலிருந்து புதிதாக வந்த பட்டதாரி முதல் கட்டுகட்டாக புத்தகங்கள் படித்த வைதிக பண்டிதர்கள் வரை எல்லா வகுப்பினரும் வாதத்தில் கலந்துகொள்வர். ஆசார்யஸ்வாமி முட்டாள்களுடனும் பலவகைப்பட்டவர்களுடனும் பேசிப் பேசிச் சளைக்காமல் மறுபடியும் மறுபடியும்,வாழ்க்கையின் ஒருமைத் தன்மையையும், மனிதவர்க்கத்தின் லக்ஷியத்தையும் எடுத்துக் கூறுகிறார்; ஆன்மாவை அறிவதில் உள்ள ஆனந்தத்தை விளக்கிக் காட்டுகிறார்.

அஸ்தமிக்கிற வரையில் வெகு அழகாக சர்ச்சை நடைபெறுகிறது. பிறகு ஆசார்ய ஸ்வாமி அந்திப்பொழுதின் பிரார்த்தனை யிலும் சிந்தனையிலும் ஈடுபடுகிறார். இவை பூர்த்தியாகச் சுமார் இரண்டு மணி நேரத் துக்குமேல் ஆகும். பிறகு நிம்மதியாகச் சில பழங்களையும் பாலையும் அருந்திவிட்டுச் சிரமமாற்றிக் கொள்ளச் செல்லுகிறார்.

கிராமங்களில் போதித்துக் கொண்டு செல்லும்போது என் ஆசாரியஸ்வாமி யைப் பார்க்கவேண்டும்! ஜனங்களுக்கு மத உணர்ச்சியை உண்டுபண்ண வேண்டு மென்றும் பீடத்தின் சக்தியையும்ஆசீர்வா தத்தையும் கொடுக்கவேண்டுமென்றும் எப் பொழுது தோன்றுகிறதோ அப்பொழுது, பக்த கோடிகள் சூழ, குதிரைகள், யானை கள், ஒட்டகங்கள் பின்பற்ற வாத்ய கோஷங்களுடன் தன் அழகிய பல்லக்கில் அவர் ஏறிச்செல்கிறார். அப்பொழுது அவர் தன் பரிவாரங்களுடன் ஓர் நகருகின்ற நக ரம் போல் காணப்படுகிறார். அக்கம்பக்கத் தில்பேச்சு அவரைப்பற்றித்தான். ஒவ் வொரு க்ஷேத்திரத்துக்கும் கோவிலுக்கும் அவர் செல்லுகிறார். கிராமங்களிலுள்ள எல்லா புண்யதீர்த்தங்களிலும் அவர் ஸ்நா னம் செய்கிறார். ஜனங்களின் மத உணர்ச் சியைக் கிளப்புகிறார். களங்கமற்ற தூய உடுப்பில் ஒவ்வொருவரும் அவரைச் சூழ்ந்துக் கொள்ளுகிறார்கள். ஆசார்ய ஸ்வாமியின் உத்தரவின்பேரில் லோபி கூடத் தன்னிடத்தில் இருக்கும் பொன்னை தானம் செய்கிறான்; காமுகன் ஒரு நாளை க்கு தன் சிற்றின்ப சுகத்தை விட்டு விடு கிறான்.

அங்கு கிடைக்கும் வருமானத்தில் ஒரு பாகத்தை, அந்த கிராமக் குளத்தையும், கோவிலையும் மராமத்து செய்வதற்குச் செலவழிக்கிறார். பிறகு உண்மைக் கூட் டுறவு மனப்பான்மையில் நடத்தப்படும் கிராம வாழ்க்கையை அவர்களுக்கு எடுத் துரைக்கிறார்.

ஒவ்வொரு இந்திய கிராமத்துக்கும் ஆசார்ய ஸ்வாமி வருகை ஒரு தெய்வீக சம்பவம். குறைந்தது 25 வருஷங் களுக்கு அது அக்கிராமத்திற்கு க்ஷேமத் தைக் கொடுக்கிறது. ஆசார்ய ஸ்வாமி சிறிதுகாலம் தங்கி இருக்கும்போது கிரா மத்திலுள்ள ஒவ்வொருவரும் மற்றவை களைமறந்து ஆசார்ய சேவையில் ஈடுபடுகி றார்.விவசாய வேலைகள்கூட நின்றுவிடுகின் றன. ஸ்திரீகளும் புருஷர்களும், குழந்தை களும், எல்லோரும் அவருடைய பாதத் தருகிலேயே இருக்கிறார்கள். அவரவர் கள் சக்திக்கேற்றபடி எல்லோரும் தங் கள் தங்கள் காணிக்கையைப் பணமாகவும் தான்யமாகவும் செலுத்துகிறார்கள்.

ஆனால் அவர்கள் இவ்வளவுக்குக் குறை யாமல் செலுத்தவேண்டும் என்று ஒரு நிர்ணயம் உண்டு. சாதாரணமாக நூற் றெட்டு காசுகள் பாதகாணிக்கையாக ஆசார்யாள் பாதத்தில் சமர்ப்பிப்பது என் பது பிரஸித்தம். காசுகள் தங்கமாகவும் இருக்கலாம் வெள்ளியாகவும் இருக்கலாம். ஹிந்து வைதீக சடங்குகளில் நூற்றெட்டு என்கிற எண் ஓர் முக்கியத்வம் வகிக் கிறது. அது ஓர் ரஹஸ்ய சக்தியுடன் கூடி இருக்கிறது. காயத்ரி உச்சரிப்பது முதல் ஆசார்ய ஸ்வாமிக்கு காணிக்கை செலுத்துவது வரையில் நூற்றெட்டு நிர் ணயிக்கப்பட்ட எண். இதற்கு மேல் ஒரு எண்ணும் இருக்கிறது. ஆயிரத்தெட்டு, இது விசேஷ எண். இதன் சக்தி இன் னும் அதிகம். எனவே ஒரு தனவந்த னின் காணிக்கை ஆயிரத்தெட்டு காசுகள். அதை ஆசார்ய ஸ்வாமி பெற்றுக்கொண்டு உடனே அதை மதபோதனைக்கும், ஸம்ஸ் கிருதத்தை அபிவிருத்திக்கும் செலவிடு கிறார்.

என் ஆசார்ய ஸ்வாமி உலகத்திலேயே பழமையான சுயநலப் பற்றற்ற சன்னியாச கோஷ்டியைச் சேர்ந்தவர். பிராம்மணர் களுள் உத்தமர் அவர். ஆனால் வகுப்பு வித்தியாசங்கள் பார்க்காதவர். ஏழையி னிடத்திலும், பஞ்சமனிடத்திலும் அவர் அன்பு பாராட்டுகிறார். அவர்கள் முன் னேற்றத்தில் அவர் அக்கரைப்படுகிறார். வித்தியாசமின்றி எல்லோரையும் ஒரே பார்வையில் பார்க்கும் தன்மை வாய்ந்தவர். ஆபத்துக் காலத்தில் உபயோகிக்க வேண்டிய ஹிந்து மதத்தின் சக்தி அவர்.

வைதீகத்தில் சிக்கனம்

"குகப்பிரியை"

கதாபாத்திரங்கள் :

குண்டல தீக்ஷிதர் — ஊரிலே பெரிய வைதீகர்.
ராமு கனபாடிகள்
சுந்தர சாஸ்திரிகள் } —புரோகிதர்கள்.
சேசி — சுந்தர சாஸ்திரிகள் மனைவி.
மாமி — தீக்ஷிதர் மனைவி.
இடம் — சுந்தர சாஸ்திரிகள் வீட்டுக் கூடம்.
காலம் — சாயுங்காலம் 5 மணி.

காட்சி ஆரம்பம்

கடிகாரம் அலாரம் அடிக்கிறது?

சுந் :—அடியே! ஏன் அலாரம் அடிக்கிறது. சந்த்யாவந்தனம் பண்ண ஜலமும் விபூதி மடலையும் கொண்டு வா.

சே :—எல்லாம் கொண்ட்ரலாம்.

(பஞ்சபாத்திரம் உத்தரிணி விபூதிமடல் இவைகளைக் கொணர்ந்து தொப்பென்னு வைக்கிறாள்.)

சுந் :—என்ன? இந்தப் பாத்திரங்கள் மேலே இவ்வளவு கோபம்

[கதவு திறக்கும் ஓசை]

யாரங்கே?

ராமு :—நான்தான் ராமு.

சுந் :—ஹரிஹி! வரணும். வரணும் சுக்லாம் பரதரம்..........(மந்திரங்களைச் சொல்லுகிறார்).

ராமு :—வண்டா! உங்க தமையன் பிள்ளை ரகுநாதன் என்ன பண்றான்?

சுந் :—ஓம் பூ: மூக்குப் பிடிக்கச் சாப்பிடறான். அமிருதம் பிரம்மா. ஊரைச் சுத்தறான். வீட்டை வித்தாச்சு. நிலத்தை வித்தாச்சு. கம்பங் கொல்லையையும் வித்தாச்சு.

(தலையில் தீர்த்தத்தைப்ரோக்ஷித்துக் கொள்ளுகிறார்.)

ராமு :—என்னடா வீட்டை வித்ததுக்கா புரோக்ஷணம் பண்ணிக்கறெ. இது கிடக்கு. படிப்பு என்ன சங்கதி. என்ன பாஸ் பண்ணிருக்கான்?

சுந் :—மூன்றும் வருஷம் 12 ரூ பணங் கட்டிப் பரிக்ஷைக்குப் போனான் போயிடுத்து. போன வருஷம் போனான், போயிடுத்து. இந்த வருஷம் என்ன ஆகுமோ தெரியாது.

[அர்க்யம் விடுகிறார்]

[உள்ளிருந்து சேசியின் குரல்] திவ்ய மாருக்கு ஸந்தி பண்ற சவரணை. ஐயே—

ராமு :—அது கெடக்குன்னு. பொடி டப்பி இருந்தா எடு.

சுந் :—என்ன ஓய். அடிமடியிலே கையைப் போடுறீரே. நான் பொடி மட்டையைத் தொலச்சு தலைமுழுகி எந்த யுகமாச்சு.

ராமு :—போடா போ. என்னண்டையே சரடு விடரயே. நேத்து ஒன் மச்சினன் கையிலே காலணாக் குடுத்து பட்டணம் பொடி வாங்கிண்டு வரச் சொல்லலே. எனக்குத் தெரியாதோ?

சுந் :—(தணிந்த குரலில்) இல்லெங்காணும். அது எனக்கில்லென்னு. கோடியாத்து குண்டலதீக்ஷிதருக்கு.

ராமு :—என்னடா இது. இல்லாத அரட்டை கல்லி பண்றே. குண்டல தீக்ஷிதருக்குப் பொடி வாங்கறத்துக்கு நீதான் 'கண்டிராக்ட்' எடுத்திருக்

கயோ? பேஷ் பேஷ். போனது போக நூறு வயஸ், அவரே வந்துட்டார். கேட்போம்.

சுந்:—(தணிந்த குரலில்) ஹரிஹி! ஒண்ணும் கேட்டு வைக்காதேயும். இந்தாரும் பொடி டப்பி. அவர் வாயிலே என்னெ சிக்க வெச்சூடாதேயும். உமக்கு அனந்த கோடி நமஸ்காரம். அவர் பொடி போடற விஷயம் அவாத்துலே பொண்டுகளுக்குத் தெரியப்படாதாம். வேறொரு ரகசியமு மில்லெ. அதோ ஆடி அசெஞ்சுண்டு வாரரே. கூப்பிடுவோம். அப்புறம் நேத்துப் பொறந்த பசங்கள் நம்மை அலக்ஷியம் பண்ற துன்னு உபாத்யாயத்துலே மண்ணைப் போட்டுடப் போறூர். (இருவரும் ஒரே குரலில்) ஹரிஹி வரணும்! வரணும்! இப்பதான் ஒங்களே நெனச்சோம். நேசமுள்ளாரை நெஞ்சிலே நெனென்னு சாக்ஷாத் பரமசிவம் மாதிரி நீங்களே வந்தூட்டேள். வரணும் வரணும்.

சுந்:—அடியே! யாரங்கே. தீக்ஷிதர்வாளுக்கு ஒரு மணை கொண்டா.

(உள்ளிருந்து சேசி) இங்கே அடியுமில்லே. நுனியு மில்லெ. பலகா வேணுமான வந்து எடுத்துண்டு தொலையறது தானே. ஒடு எடுத்தவாள்ளாம் ஒகோன்னு கால்மேலே கால்போட்டு உக்காந்துண்டு அட்டகாசம் பண்ரு. என் விதி உள்ள நாள் மட்டு ஒழைச்சுஓடாப் போறேன்.

சுந்:—உஸ்! வாயடக்கிப்பேசு. தீக்ஷிதர் வாள் வந்திருக்கா.

(உள்ளிருந்து சேசி) வந்தா என்ன? ஆரத்தி எடுக்கணுமா? தீக்ஷிதர் வந்தா ஒங்களுக்கு ஒசத்தி. எனக்கென்ன? இவரைப்போல நூத்தெட்டு குண்டல தீக்ஷதரை நான் பார்த்திருக்கேன். உங்களுக்கு வேணுமானு வேஷ்டியெ வரிஞ்சுகட்டிண்டு சாஷ்டாங்கமா நமஸ்காரம் பண்ணுங்கோ. நான் அடுப்பிலே காரியமாருக்கேன். சாதம் முளுந்து வழியறது. பலகா வேணுன்னு வந்து எடுத்துண்டு போங்கோ.

குண்:—அப்பா! சுந்தரம். அவளே ஏன் தொந்தரவு பண்றே. நேத்துப் பொறந்த குட்டி. இவதான் எனக்கு மரியாதை பண்ணணுமா? அம்மா! சேசி. அவன் கிடக்கறுன். நானே பலகாயை எடுத்துப் போட்டுக்கறேன்.

(பெரு மூச்சோடு. உள்ளிருந்து பல கையை எடுக்கிறூர். தடதட வென்று பாத்திரங்கள் விழுந்து உருளும் சப்தம்.)

சு:—பரவால்லென்னு. நான் கொண்டு வரேன். [பலகை போடும் சப்தம்.]

ராமு:—அங்கே என்ன? பூகம்பமோ?

சுந்:—உஸ்! சும்மாருங்கோன்னு. வாங்கோ உக்காருங்கோ. ரொம்பநாளாச்சு பெரியவா தரிசனம் கெடச்சு. என்ன விசேஷமோ?

(உள் - சேசி) காரியமில்லாதெயாவந்திருப்பர். சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

சுந்-(சற்று அதட்டலாக) உஸ்! சும்மா யிரு.

குண்—அது கெடக்குன்னு. மேலக்கா. வேரி ராமுபிள்ளே ஐ. ஸி. எஸ். பரீக்ஷைக்கி போறுனுமே தேறிடுத்தோ.

சுந்:—அப்படியா? எனக்குத் தெரியவே தெரியாதே.

குண்:—ப்பூ! இவ்வளவுதானு? உன் மூலமா ஜாதகம் வாங்கலான்னு எங்காத்துலே இவ சொன்னுளே.

சந்:—ஜாதகத்துக் கென்ன பிரமாதம். எனக்கு அவாளே நன்னு தெரியும்: வாங்கினுப் போச்சு.

ராமு:—அதுசரிதான். கை வலுத்த கை. தகுந்த புள்ளி. ஏதாவது தாகு கிரகு தட்டப்பார்த்தீரோ தொலேஞ்சீர். அப்பறம் இந்த ஊரிலே தலே நீட்ட யோக்யதே இல்லே.

குண்:—(கோபத்துடன்) என்னடா இது. தாகாவது கிரகாவது, அது எவன் செய்யறவேலே. நான் என்ன பணத்தையா சட்டெபண்றேன். பணமும் சரி ஓட்டாஞ் சல்லியும் சரி. மனுஷாளுடைய ஸ்நேகம்னு பெரிசு. பணம்

யாரைக்கேட்டு வரது. யாரைக்கேட்டுப் போறது. மனஸு வெச்சா பணம் ஸம்பாதிக்கரது ஒரு பிரமாதமா ?

ராமு:—நான் சொல்றேனென்று கோவிச்சுக்கப்படாது. நீங்க என்னமோ சுலபமாய்ச் சொல்லியூட்டேள். எவன் ஒரு பைசா குடுக்கறேங்கறுன்? அமாவசைத் தர்ப்பணத்துக்கு அரைக்கா ரூபா குடுக்கறத்துக்கு மூக்காலே அழுறுன்கள். சினிமாவிலே 'ஜம்'ன்னு ஒன்னரை ரூபா ஸீட்டிலே போய் உக்கார்ரா. இந்த நாள்லே வைதீகனை யாரையா சீந்தரா. அரிசின்னு அள்ளுவாரில்லே. உமின்னு ஊதுவா ரில்லே. வேலேக்காரனேவிடக் கேவலமா நடத்தரு. அதிகார தோரணையோட, "ஏன் எட்டுமணிக்கு வந்தீர். தேங்காயை உரிச்சுவையும். குழந்தைகளுக்கு சித்தே விளையாட்டுக்காட்டும்"ன்னு ஏவருன்கள். மட்டுமரியாதை எல்லாம் போயிடுத்து. காலம்... காலவித்யாசம். ஹூம் (பெருமூச்சு விடுகிறுர்.)

குண்:-அதையேதான் நானும் சொல்ல வந்தேன். நம்மடவன்களே கௌரவத்தெ குறைச்சுக்கருன்கள். மனுஷ்யனுக்குக் கௌரவம் குடுக்காட்டாலும் வித்தைக்கி கௌரவம் குடுக்க வாண்டாமா? என்னமோ இங்கிலீஷ் படிச்சூட்டாளாம். நாலு வேதமும் அத்யயனமும் பண்றதுன்னு சாமான்யமா? இன்னிக்கி படிச்சு நாளேக்கிக் காயிதம் வாங்கற படிப்புக்கு ஒரு விசேஷ கௌரவமாம் அதென்ன விசேஷமோ? எனக்கும் வயஸு 60ஆச்சு எந்த இடத்திலேஎடுத்தால் ஒரு சந்தை தவறுமா? எனக்கு ஸமானமா ஸ்வரசுத்தமா எவன் ஸாமம் சொல்ருன். விரலே மடக்குப் பார்ப்போம். எங்கே என்னோடே நீஸாமம் சொல்லு பார்ப்போம்— —ஹூம்! அன்னிக்கி ஒருநாள் ஸ்ரீரங்கநாதர் சந்நிதிலே அண்ணங்கார் ஆசாரியாரும், அக்னி ஹோத்ரம் அப்பளாசார் ஸ்வாமியும் முதலாயிரம் ஸேவிச்சிண்டிருந்தா. நானும் கூடவே சொல்லிண்டே வந்தேன். அண்ணங்கார் ஸ்வாமி ஆச்சர்யப்பட்டுப் போனுர். அப்பளசாரியார் அப்படியே மூர்ச்சை போட்டு விழுந்துட்டார்.

ராமு:-அப்படியா? எனக்குத் தெரியாதே. இது கடக்கட்டும். மனஸு வெச்சா சம்பாதிக்கிறது ஒரு பிரமாதமான்னு சொன்னேளே, எங்களுக்கு ஏதாவது ஒருவழி சொல்லப்படாதா? ரொம்ப மோசமாருக்குன்னு. யாரெக் கேளுங்கோ, பணமுடை தான். பேபர் கீபர் எல்லாத்திலெயும் இதே சங்கதி தான். அழகா கொட்டை எழுத்திலே "பொருளாதார நெருக்கடி"ன்னு போட்டிருக்கு.

குண் :—(தொண்டையைக் கனைத்துக் கொண்டு) பொருளாதாரமாவது நெருக்கடியாவது, அதெல்லாம் வீண்பொளி. அவனவன் தன் பணத்தை இறுக்கி முடிஞ்சுண்டு பிறத்தியானே அமுக்கணும்னு பார்க்கருன்கள். சோம்பேறித்தனந்தான் மலிஞ்சு கெடக்கு. திண்ணையிலே உக்காந்து தெய்வம் படியளக்கும்னு நெனெக்கருன்கள். ஒன்னு ஒரே சோம்பேறிக் கூட்டம். எவன் உடம்பு வணங்கி வேலெசெய்யருன். இல்லையா? மட்டு மரியாதெ ஒன்னுமில்லாமெ கௌரவா கௌரவங்கூட இல்லாத பணக்காராளண்டை போய், கெக்கபிக்கன்னு பல்லெக்காட்றதுக. என்ன பொழெப்பு வேண்டிக் கடக்கு. இதெல்லாம் உத்தேசிச்சுத்தான் நான் ஒரு முதல்தரமான யோசனை பண்ணிருக்கேன். கேட்டா பிரமிச்சுப்போயிடுவேள்.

(சுந்தர சாஸ்திரிகள், ராமு இருவரும் மிகுந்த ஆவலுடன்) என்ன? என்ன? சொல்லுங்கோ. அதையும் பாத்துடுவோம்.

குண் :—பார்க்கிறதாவது சொளே சொளேயாய் ரூபாய். அதுவும் கவர்மெண்டார் காசு.

ராமு :—என்? சஷ்டியப்த பூர்த்திக்கப்பறம் கவர்மெண்ட் சர்வீஸிலே சேரலாம்னு ஆசையோ? ஏதேது பால்யம் திரும்பிப் போச்சு—ஹ—ஹ—ஹ— (சிரிக்கிறுர்.)

குண் :—பூராக் கேட்டுட்டு பேசு. அதுக் குள்ளே அவசரப்பட்டா எப்படி ?

(சுந்தரம் ராமுவுடன்) சித்தெ திரு வாயை மூடிண்டுருந்தா என்னமோ ?— அவரிருக்கட்டும். நீங்க சொல்லுங் கோன்னு ?

குண்:—எலே !—சுந்தரம்! ரேடியோன்னு என்னன்னு தெரியுமா ?

சுந் :—ஆகா ! தெரியாதா என்ன? திவ் யமா தெரியும். அதுதான் நம்ம ஊர்லேகூட ஆத்துக்காம் ஒருபொட்டி வச்சு எங்கயோ நடக்கறதெல்லாம் 'கொட்டும் மொழக்குமா' கேக்கறதே. அதுதானே. இதுகூடத் தெரியா தெயா இந்த ஊர்லே உபாத்யாயம் பண்ணிகவக்கறேன்.

குண் :—அப்படிச் சொல்லு.

சேசி:—(உள்ளிருந்து) என்ன கண்ட்ராவி. லேடி கீடின்னு என்னமோ சொல்றுரே. அவர் கிட்ட ஆப்டுண்டு அசட்டுப் பிசட் டுன்னு முழிக்காதேங்கோ.

குண் :—அம்மா, சேசி. நீ சித்த நாழி சும்மா யிரு. நான் சொல்றதைப் பூராக் கேளு. மத்யே மத்யே பானீயம் ஸமர்ப்பயா மின்னு குறுக்கேவராதே. ரேடியோவிலே எத்தனையோ தினுசு தினுசான விஷயங்கள்ளாம் போடறு. பாட்டுக் கச்சேரி, சதிர்க் கச்சேரி, பிர சங்கம், குழந்தைகளுக்குன்னு தனிசங் கதிகள். பள்ளிக்கூடங்களுக்கும் தனி; கிராமங்களுக்குஅலாதி. இப்படி வேறே வேறெ தினுசா வச்சிருக்கா. நம்மூர் பசக செங்கானும் பெரியசாமியும் கூட தாரை தம்பட்டம் எல்லாத்தோடேயும் " சஞ்சணச்சான் போடுபோடு. சண சணச்சான் போடுபோடு"ன்னு கோடாங்கி, கரகம், குறி சொல்றது. ஒன்னு பாக்கி யில்லாமெ வெளு வெளுன்னு வெளுத்து வாங்கிப்பிட் டானுகள். இத்தனை பேருக்கும், 'சான்ஸ்' குடுத்தாளே. வைதீகாளுக் குன்னு ஒரு தனிப்ரோகிராம் போடப் படாதோ. இதனுலே வருமானமும் அதிகமாகும். அவாளுக்குத் தோணலே நம்மைப் போலெ ஒரு பெரியவா அட் வைஸ் பண்ணிறு போடுவா.

ராமு :—ஏதேது. நீங்ககூட இங்கிலீஷ் கலந்தடிக்கிறேளே. சான்ஸ், அட் வைஸ், இதெல்லாம் எப்பொ முதல்.

சுந் :—சும்மா யிருங்காணும். அப்பறம் நையாண்டி பண்ணலாம்.

குண் :—என்ன ? நான் சொல்றதென்ன ? வைதீகாப்ரோக்ராம்னு என்னத்தைப் போடுவா ? வேத பாராயணம் பண்ற தான்னு கேக்காதே. அதிலெதான் இருக்கு சூட்சுமம். தெரிஞ்சுதா ? வரு ஷப் பொறப்பிலேயிருந்து கணக்கெடு. விவாகம், உபநயனம், ஸீமந்தம் எல்லா மாக எத்தனை நடக்கறது தெரியுமோ ? வடக்கே போனவாள்ளாம் புரோகித ரில்லாமெ எத்தனையோ எடத்திலெ சிர மப்படறு. மந்த்ரலோப மில்லாதெ பண்ணி வைக்கிறவன்களும் குறைவு. வைதீககர்மாக்கள் எப்படிச் சரிவர நடக் கும். தவிர சித்ரா பௌர்ணமி, விநா யக சதுர்த்தி, ஆவணி அவிட்டம் வர லக்ஷ்மி விரதம், நவராத்ரி, சிவராத்ரி இதுகள் வேறெ. இந்த மாதிரி விஷ யங்களை ரெண்டு பகுதியா பிரிக்கறது. கலியாண வகையறுவேறே ; பண்டிகை பருவம் விரதாதிகள் வேறெ. மந்திரங் களை அழகாய் துண்டுப்பிரசுரம் மாதிரி அச்சடிச்சூடறது. பெயர், கோத்ரம், ஸூத்ரம், போடுகிற இடங்களைக் காலி யாவிட்டுடறது. இந்த மாதிரி பிரசுரங் களைக் கவர்மெண்டாரே ஏத்துண்டு போடறது. நமக்கு ஏதாவது சிரம தக்ஷிணை குடுத்துடறது. தவிர இன்ன கிழமை இன்ன லக்னத்திலே விவாகம்னு போட்டுடறது. அடுத்த லக்னமாயிருந்தா அடுத்த ரூம்லே இன் னேரிடத்திலே ப்ராட்காஸ்ட் பண்ண றது. இந்த விஷயங்களை யெல்லாம் வானெலியிலே போட்டுடறது.

ராமு:-என்ன இது? நீங்க சொல்றது ஒன் னும் தலைகால் புரியலையே.

குண்:-புரியலையா ? அப்படிக் கேளு. நன்னுபுரியராப்பலே சொல்றேன். விவாகம் கன்யாலக்னம்ன்னு போட

றது. அப்பறம் ஒவ்வொன்னு, வர பூஜை விரதம்னு மணியைக் குறிச்சுப் பிடறது. துண்டுப் பிரசுரங்களை முன் னாலேயே வாங்கி வெச்சிருப்பா. குறிப் பிட்ட சமயத்திலே ரேடியேவெத் திறந்தா. மந்த்ரத்தை நன்னு நிறுத்தி நிறுத்தி ஊர் பேர் கோத்ரம் ஸூத் ரம் எல்லாம் சேத்திச் சொல்ரு, பட்ட ணத்திலே சிம்லாவிலேருந்து வந்து அவசரமாக கலியாணம் பண்றவா என்ன பண்ரு தெரியுமோ? ஹோடல் லே நூறுகப் காபி, நூறு சாப்பா டுன்னு ரூபாயைக் குடுக்கரு. மூணு வேளை சாப்பாடு நாலு வேளை காபி யோடெ கல்யாணத்தெ முடிச்சிண்டு ஓடரு. நான் சொன்னுப்பலே வை தீகா ப்ரோகிராம் இருந்துதோ; வை தீகனைத் தேடி அலைய, அவாளும் கடைசி மூகூர்த்தமாச் சேன்னு பத் திடத்திலே ஒப்புக்கிண்டு வாயிலே வந்தபடி மந்த்ரங்களை முன்னும் பின் னுமா ஒளறிப் பண்ணிவைக்க இந்த மாதிரியான அஸந்தர்ப்பங்கள் நேரவே நேராது. சிம்லாவிலேயே, அவா வீட் டிலேயே செம்மணிட்டுக் கோலமிட்டு ரேடியோ வச்சிருந்தா மந்த்ரங்கள் ஆனந்தமாகக் கேட்கும். மந்த்ரலோப மில்லாமெ விவாகங்கள் ஆனந்தமா நடக்கும். 'யாவத் சந்த்ரதிவாக ரௌ' சூர்ய சந்த்ராளுள்ள பரியந்தம் தம்பதிகள் க்ஷேமமா யிருப்பாகள். நடுவிலே, எழுந்திருக்க, உட்கார, அக் னியை வலம்வர, இவைகளை யெல்லாம் இங்கிருந்தே அழகாய்ச் சொல்லலாம்.

ராமு:-வாஸ்தவந்தான். பிள்ளை யாண் டான்கள் ஹோமம் பண்ருளா, சிக ரெட் புகைவிடருளான்னு நமக்குக் கவலையில்லை. வேர்க்காது, புகையாது.

சுந்:-என்ன? நிஜமாகவா? ஏதாவது கிண் டல் பண்றேளா?

குண்:-ஹி ஹி ஹி! (சிரித்துக்கொண்டு) இன்னும் எத்தனையோ சௌகர்யம் பண்ணிக்கலாம். ஆவணி அவிட்டம் சமுத்திர ஸ்நானம் இதுகளுக்கெல்லாம் மனுஷா வரவர ஒவ்வொருத்தருக் கும், மமோபாத்த ஸமஸ்தன்னு— ஆரம்பிச்சு ஆரம்பிச்சு உக்காத்திவெக்க ருனுகளே. இந்த அநாகரிகம் அடியொ டெ ஒழியும். ஒரு ரேடியோ ஸெட் டை வச்சூட்டா ஏக காலத்திலெ அத்தனை பேரும் மகா ஸங்கல்பம் பண்ரு. இதிலே இன்னொன்றுகூடப் பண்ணலாம். பத்துக் கல்யாணத்தைக் காண்டிராக்ட் எடுத்துக்கறது. வரிசை யாய்க் கூடத்திலே பத்து தம்பதிகளை உக்கார வைக்கிறது. ஒரே ஒரு ரேடி யோ ஸெட்! போறும். என்ன? யோ சனை எப்படி?

ராமு:-அடாடாடா! அற்புதம், அற்புதம் சாக்ஷாத் சர்வேசுவரனுக்குத்தான் பிரீதி. அடாடா! தப்பிப்போயின்னு இந்தப் பாழும் ஊரிலே பொறந்தூட் டேள். வேறெங்கயாவது பொறந்திருந் தா உங்களோட சாதுர்யத்துக்கு முதல் மந்திரி பதவி கட்டாயம் கெடச்சிருக் கும்னு. அடாடா, என்ன அற்புதமான யோசனை. தங்களைத்தவிர எந்த மடப் பயலுக்காவது இவ்வளவு அழகா ஒரு யோசனை தோனத்தான் தோனுமா? தோனினுலும் இத்தனை வக்கணையாய்ச் சொல்லத்தான் தெரியுமா?

(உள்ளிருந்து சேசி) வக்கணை பேசி வாழ்ந்தாப்பலேருக்கு. அவாத்து அம் மாமி வந்து அரை நாழியாய் காத்துண் டிருக்கா. அவசரமா ஏதோ சொல்லணு மாம்.

குண்:-அட ராமா! அவளா?

ராமு:-சுந்தரம்! பொடிடப்பி எங்கே?

குண்:-உஸ்! இரையாதேடா. நான் பொடி வாங்கினேன்னு சொல்லாதே.

மாமி:-நன்னுருக்கு. கலியாண சம்பிரமம் திவ்யமாருக்கு. கல்யாணமா? கத்தி ரிக்கா பேரமா? நன்னுருக்கு யோசனை! திவ்யந்தான். யாரான கேட்டா சிரிக் கப்போரு. போறுமே சவரணை. அம் மா! சேசி, வேறயாரண்டையும் சொல் லாதேடிம்மா. இந்த ஊர் வைதீகா காதிலே பட்டால், இந்த அசட்டுப் பிராம்மணனைத் தவிடுபொடியாக்கி விடு வா. நான் வரேண்டியம்மா.

கண்ணன்

"பந்துலு"

நந்த வனந்தனிலே—கண்ணன்
நாவல் மரத்தருகில்
நின்றிருக் கையிலே—நானங்கு
சினந்து வந்தேனடீ. 1

குலுங்க நகைத்தாண்டீ—கண்ணன்
கும்மி யடித்தாண்டீ—மெய்
சிலுங்கவே வந்தாண்டி—அவனெனை
சிக்கிப் பிடித்தாண்டீ. 2

மருண்டு நின்றனடீ—மனம்
மயங்கிப் போனேனடீ—அவன்
இருண்ட வண்ணனடீ—என்னை
இறுக அணைத்தாண்டீ. 3

பாலும் பருகிடுவான்—கண்ணன்
சாலப் பொய் பேசிடுவான்
நீல விசும்பினிலே யவன்—நிறம்
நித்தமும் தோன்றுமடீ. 4

கன்றுகள் மேய்த்திடுவான்—கண்ணன்
கண் பொத்தி ஆடிடுவான்
நின்று குழலூதி—நிதமும்
நிரையைக் காத்திடுவான். 5

சின்னஞ் சிறுவனடி—கண்ணன்
சீர்நிறை பொன்னனடீ
தன்னந் தனியாக—என்னைத்
தஞ்சமே என்றிடுவான். 6

மன்னனை ஒத்தாண்டீ—கண்ணன்
என்னையும் காத்தாண்டீ
கண்ணனையே நாமும்—கருத்தில்
கருதி வழிபடுவோம். 7

பிரிதிவியின் கண்ணீர்

[ஏ. முகம்மது ரஷீத், தஞ்சை]

"உனக்குத் துணையாக வந்ததே என் மடத்தனம்" என்று மிகவும் கோபமாக மொழிந்தான் முகம்மது கோரி.

தனேஷ்வாரில் படுதோல்வியாக முறியடிக்கப்பட்டதினுல் அவன் உடம்பு சினத்தின் மிகுதியால் பதறிக்கொண்டிருந்தது.

ஜயச்சந்திரன் இவன் சொன்னதைக் காதால் கேட்டபோதிலும் அவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. நீல வானத்தைப் பார்த்துக்கொண்டே நின்முன். அவன் சலனமற்றமுகம் அவன் மனம் பலயோசனைகளின் நடுவே அகப்பட்டுக்கொண்டிருப்பதை எடுத்துக் காட்டியது. திடீரென்று ஏதோ நினைத்தவாறு எழுந்தான். கோரியின் முன்வந்து நின்முன்.

கோரி ஒருவிதமாக அவனை நோக்கினுன். ஆனல் ஜயச்சந்திரன் இதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அவன் மனம் எங்கேயோ சென்று அலைந்துகொண்டிருந்தது.

திடீரென்று, "என்ன ?...என்ன சொன்னுய் ?" என்று அனுவசியமாகக் கேட்டான்.

கோரி தன் பற்களை கடித்துக்கொண்டான். அவன் கோபம் அடங்கியதாகத் தெரியவில்லை.

"உனக்கு உதவி செய்யவந்த என் புத்தியைத்தான் செருப்பாலடிக்க வேண்டுமென்றேன்" என்று படபட என்று பதிலளித்தான்.

"என்ன இப்பொழுது முழுகிவிட்டது என்று இப்படிப் பதறுகின்ருய் ?"

"என்னவா ? ... சரிதான் ...... இதைவிட ஒருவீரனுக்கு வேறென்ன அவமானம் வேண்டி இருக்கின்றது ?......என், அந்தப் பிரதிவிநாய் அப்படித் திடீரென்று பின்னுல் வந்து தாக்கும் என்று எனக்குச் சொல்லி இருக்கக்கூடாதோ ?"

"அப்படி அவன் செய்தாலும் செய்வான் என்று நான்கூடச் சந்தேகப்பட்டேன்" என்று ஜயச்சந்திரன் உண்மையைச் சொல்லி இருக்கலாம். ஆனல் ஏனே பேசவில்லை. சிறிது நேரம் மௌனமே அரசு செலுத்தியது. கோரிதான் மறுபடியும் ஆரம்பித்தான்.

"ஜயச்சந்திரா ! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். என் நெஞ்சு ஆற, என் இரத்தத்தின் துடிப்பு நிற்க, நான் அந்தப் பயலை மூதுகு காட்டும்படி துரத்தி அடிக்க வேண்டும்......"

"அப்படி செய்யலாம்......என்னைக் கேட்கும் பட்சத்தில் அவனைச் சித்திரவதை செய்து கொல்லவும் வேண்டும்."

"பேசலாம்...இதைவிட அதிகமாகவும் பேசலாம். ஆனுல் செய்வது சொல்வது போல அவ்வளவு சுலபமல்லவே..."

"எனக்கொரு யுக்தி தோன்றி இருக்கின்றது. அதன்படி செய்தால் சொல்லுவதுபோல சுலபமாகச் செய்துவிடலாம்."

"என்ன அப்படிப்பட்ட யுக்தி ?"

"அதான், உதயசிங்கை நம் கையில் போட்டுக்கொண்டால் நம் காரியம் ஜயமாகிவிடும்."

"நல்ல யுக்திதான். ஆனுல் எப்படி அவனை நம் பக்கத்திற்குக் கொண்டு வருவது ? பிரிதிவியின் பக்தனல்லவோ அவன் ?"

ஜயச்சந்திரன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. முகம்மது கோரியின் பக்கத்தில் வந்தமர்ந்தான். சிறிது நேரம் ஏதோ 'குசு குசு' என்று பேச்சு நடந்தது. முடிவு என்னவோ கடூரமாக இருந்த கோரியின் முகத்தையும் மலரச் செய்தது; பெரிய வெற்றியடைந்த மகிழ்ச்சி அவன் கண்களில் தோன்ருமல் போகவில்லை.

(2)

மலையின் ஒற்றையடிப் பாதை. நடு இரவு இருக்கலாம். எங்கும் நிசப்தம் நிலவி இருந்தது. மிக உயரத்திலிருந்து

கீழ் விழும் அருவிகளின் இனிய கானம் தான் வெகு தூரத்திலிருந்து வந்து நிசப்தத்தைக் கொஞ்சம் பங்கப்படுத்திக் கொண்டிருந்தது. பாலொளி வீசும் நிலவு, மரக் கிளைகளின் இடுக்கு வழியே மலையில் பட்டுக்கொண்டிருந்தது. அவ்வொளி படாத மர நிழலில் ஒதுங்கிச் செல்லும் சிறுத்தைப் புலிகள் தங்கள் நடையால் தங்களுடைய வலிமையைக் காட்டிச் சென்றன.

இவைகளுக்கு நடுவே மீசை அரும்பும் பருவத்திலுள்ள ஒரு வாலிபன் காணப்பட்டான். அவன் தன் மனத்தை எங்கேயோ பலியிட்டிருந்தான் என்பது அவன் பார்வையிலேயே தெரிந்தது. கொஞ்சமும் அச்சமின்றித் தனியாகச் சென்றுகொண் டிருந்தான்.

திடீரென்று அவன் புரவி நின்றது. அப்பொழுதுதான் கவனத்தை அடைந்தவன் போல எதிரே நோக்கினன். ஒரு மனித உடல் கிடந்தது. முகம் ஆகாயத்தைப் பார்த்தவாறு இருந்தது. நெஞ்சில் இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. வாலிபன் முகத்தில் இரக்கக் குறி தோன்றி மறைந்தது.

அவன் சட்டென்று கீழே குதித்துச் சமீபத்தில் வந்து கூப்பிட்டுப் பார்த்தான்; பதிலில்லை. கீழே குனிந்து சுவாசம் வருகின்றதா என்று நாசித் துவாரத்தில் கையை வைத்துப் பார்க்கப் போனன். திடீரென்று இவன் முகத்தில் ஒரு குத்து விழுந்தது. குத்து மிகவும் பலமான குத்தானபடியாலும், அவன் அதை எதிர் பாராததாலும் மல்லார்ந்து விழுந்தான். சமாளித்து எழுந்திருக்குமுன் சவம் போலப் பாசாங்கு பண்ணினவன் ஓடி வந்து அவன் மார்பின்மீது உட்கார்ந்து கொண்டு மறுபடியும் ஒரு குத்து விட்டான். அவன் வாளும் பிடுங்கப்பட்டது.

வாலிபனின் குதிரை மறு விநாடி தன் எஜமானனின் உதவிக்கு வந்திருக்கும். ஆனல் அதையும், எங்கிருந்தோ ஆவலோடு ஓடிவந்த சில பேர்கள் பிடித்துக்கொண்டனர்.

வாலிபன் மயக்கத்தில் வீழ்ந்திருந்தான். அவனை முறட்டுத் தனமாகக் கட்டி எங்கேயோ தூக்கிக்கொண்டு சென்றனர்.

(3)

நாலைந்து நாழிகை கழிந்திருக்கும். நிர்மானுஷ்யமான அந்தக் காட்டில் ஒதுக்குப் புறமான ஓரிடத்தில் பல கூடாரங்கள் காணப்பட்டன. பலர் அங்குமிங்கும் உலவிக்கொண்டிருந்தனர்.

முகம்மது கோரியும் ஜயச்சந்திரனும், முகத்தில் ஆனந்தம் பொங்க, கூடாரத்தில் உட்கார்ந்திருந்தனர். மிகவும் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்ததாலோ என்னவோ ஒரு பெரிய நெருப்புச் சட்டியும் அங்கிருந்தது.

"கொண்டுவாருங்கள் அந்தப் பயலை!" என்ற கோரியின் உத்திரவு, நிலவி இருந்த நிசப்தத்தைக் கலைத்தது. உதய சிங் மறு க்ஷணம் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.

கோரியின் அகம்பாவப் பார்வையும், உதய சிங்கின் அலட்சியப் பார்வையும் ஒன்றோடொன்று மோதின.

"நீதானே உதயசிங்?" என்று கோரி கேட்டான்.

"ஆம்" என்ற மறுமொழி மிகவும் கம்பீரத்துடன் அந்த வாலிபனிடமிருந்து வெளிப்பட்டது.

"அந்தப் பிரிதிவியின் உயிர்த்தோழன் என்று சொல்லப்படுபவன்......"

"சொல்லப்படுவனல்ல; பிரிதிவி மகாராஜாவின் நன்மைக்கு உயிரையும் அலட்சியமாகத் தியாகம் செய்ய உடன்படும் ஊழியன்......"

கோரி அவனை நோக்கி மெதுவாகச் சிரித்துக்கொண்டான்.

"தன்னுயிருக்கு முன் பிறர் உயிர் திரணம் என்பதை நீ அறிவாய் என்றே நம்புகிறேன்" என்று ஏளனமாகச் சொன்னன் கோரி.

"அப்படிப்பட்ட பேடிப் பயல் நானல்ல'!" என்ற அழுத்தமான பதில் வந்தது.

"சரி......வீண் விஷயத்தில் என் நேரத்தைச் செலவழிக்க நான் விரும்பவில்லை. நான் யாரென்பதை நீ அறிந்துகொண்டிருப்பாய் என்று நம்புகிறேன். நான்தான் முகம்மது கோரி......"

"எல்லாம் எனக்கு முன்னமேயே தெரிந்துபோய்விட்டது. ஏன், உங்கள் முகத்திலும் பேச்சிலுமே பெயர் எழுதப்பட்டிருக்கின்றதே!...... என்னை இப்படி வஞ்சகஞ் செய்து பிடித்த காரணம் என்ன?"

"காரணம் ஒரே வாக்கியத்தில் சொல்லிவிடுகிறேன். நீ, இப்பொழுது பிரிதிவி இருக்குமிடத்தைத் தெரிவிக்க வேண்டும்...நாளை ஆக்ரா உனக்குச் சொந்தமாகிவிடும்......"

உதயசிங்கின் முகத்தில் வெறுப்பு மலிந்தது. அருவருப்புடன் அவன் கோரியை நோக்கினன். கோரியை மேலே பேசவிடாமல் இடைமறுத்தான்.

"என்ன, என்னையும் உன்னைப்போலப் பேராசை பிடித்த நாய் என்று எண்ணிக்கொண்டாயா?"

இந்தக் கேள்வி அவன் இதயக் கொதிப்பிலிருந்து பீறிக்கொண்டு வந்தது.

கோரி இதை எதிர்பார்க்கவே இல்லை. ஆசைக் கயிற்றில் ஆடாத பம்பரமும் இருக்குமா, என்று சுலபமாக அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை.

"என்ன? ராஜ்யம் வேண்டாமா?" என்று உதயசிங்கைக் கூர்மையாக நோக்கியபடியே கேட்டான்.

வாலிபன் முகத்தில் ஒரு ஏளனப் புன்முறுவல் மலர்ந்தது. "என் பிரதிவி மகாராஜாவின் சேவைக்கு முன்பு இந்த உலகத்திலுள்ள செல்வமே எனக்குத் துரும்புக்குச் சமானம்" என்று மிகவும் சாதாரணமாகச் சொன்னன்.

தன்னிடம் இவ்வளவு அனுவசியமாக உதயசிங் பேசுவதைக்காண கோரியினல் பொறுக்க முடியவில்லை. திடீரென்று, மீசைகள் துடிக்க, எல்லையற்றச் சினத்திற்கு ஆளானன்.

"என் கேள்விக்குப் பதில் சொல்லாவிட்டால் என்ன நேரும் என்பதை நீ அறிவாயோ?" என்று கடுமையாகக் கேட்டான்.

"என் கையில் என் வாளைக் கொடுத்து நீ இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தால் உன் கதி என்னவாகி யிருக்கும் என்பதை உன்னால் கற்பனை செய்யமுடியுமோ?" என்று சாந்தமாகப் பதில் கேள்வி கேட்டான் உதயசிங்.

கோரியின் சினம் சிகரத்தை எட்டிப் பிடித்து, அவன் அங்கங்களை எல்லாம் உலுக்கியது.

"அடி உதவுவதுபோல அண்ணன் தம்பிகூட உதவமாட்டார்கள்" என்று உறுமிக்கொண்டு, "உரித்து எடுங்கள் இந்த வண்டுப் பயலின் தோலை!" என்று உத்தரவிட்டான்.

அவ்வளவுதான்! குதிரைச் சாட்டைகள் அவன் உடம்பைப் பதம் பார்க்க ஆரம்பித்தன. சிறிது நேரத்தில் இரத்தமும் பீறிட்டுக் கொண்டு வந்தது. ஆனல் உதயசிங்கின் முகத்தில் சிறிதேனும் வேதனைக் குறி தென்படவில்லை. அலட்சியமாகவே காணப்பட்டான்.

போதும் "நிறுத்துங்கள்" என்ற உத்திரவோடு சாட்டைகள் தாழ்ந்தன.

"பிரிதிவி ராஜ் எங்கிருக்கின்றான் என்பதைஇப்பொழுதேனும் சொல்லுவாயா?" என்று உதயசிங்கைக் கேட்டான்.

உதயசிங் பதில் சொல்லவில்லை. கம்பீரமாக அவன் விடுத்த பார்வை கடைசியில் அலட்சியப் பார்வையாகக் கோரியின் கண்களுக்குள் புகுந்தது.

"என்ன? அவரிருக்குமிடமா?...... தூ! உனக்கு மானமில்லை? பேடித்தனமாக....."

கோரியினல் தாள முடியவில்லை. ஒரு சிறு குத்துவாளை உதயசிங்கின் புஜத்தில் பாய்ச்சினன்.

"வழிக்கு வருகின்றாயா? அல்லது இன்னும் வேண்டுமா? ஒரு நாய்க்கு... ஒரு மிருகத்திற்கு......வீரத்தைப்பற்றி என்ன தெரியும்?"

யுத்தம்

நேர்ந்த சமயத்தில்கூட மார்க்கட் நிலவர
ஏற்றத் தாழ்வினல் பாதிக்கப்படாதது

லைப் இன்ஷியூரன்ஸ்

அதற்கு தேய்மானம் கிடையாது, நஷ்டம் கிடையாது; ஆனல், லாபம் கூடுவதால், அதன் மதிப்பு அதிகரிக்கிறது. உடனே சொத்து ஏற்படுத்துகிறது. எதிர்காலப் பாதுகாப்பாகவும் இருக்கிறது. அதன் பெறுமானம் தன் இயற்கை மதிப்புக்கு அதிகமாகவே யுள்ளது.

எந்த பண நிலேயிலிருப்பவர்களுக்கும், யாவருக்கும் ஏற்ற லாபகரமான, பத்திரமான நாணயமான பாலிஸிகளே ஹிந்துஸ்தான் அளிக்கிறது.

இன்றே, இப்பொழுதே இன்ஷியூர் செய்யுங்கள்

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷியூரன்ஸ் ஸொஸைடி, லிமிடெட்.

*

ஹெட் ஆபீஸ் :
'ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்'
ஸுரேந்திரநாத் பானர்ஜி ரோடு,
கல்கத்தா.

சென்னை பிராஞ்சு :
'ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்'
107, அரண்மனைக்காரத் தெரு,
மதராஸ்.

ஏற்கனவே குத்துப்பட்டு உதிரம் பொங்கி வழிந்துகொண்டிருந்த காயத்தின் கீழே மறுபடியும் ஒரு குத்து !

"ஒரு உண்மை ராஜபுத்திரனுக்கு மரணமும், சித்திரவதையும் பெரிதல்ல ; மானமும், கடமையுமே எல்லாவற்றையும் விடச் சிறந்தவை.........." என்று உதயசிங்கின் இரத்தம் கொதித்தது.

"இன்னும் முடியாதா ?..."

"மானந்தான் பெரியது; கடமையை விடச் சிறந்தது வேறொன்று மில்லை!" அதே பதில்தான்.

மற்றொரு புஜத்தில் ஒரு குத்து......

....

எவ்வளவோ சித்திரவதை செய்தாகி விட்டது. இரும்பு நெஞ்சுடைய அந்த வீரன் அணுவளவேனும் அவன் கோட்டிலிருந்து அசைக்க முடியவில்லை. கோரியும் அயர்ந்து விட்டான். "இந்தப் புழுவை நெருப்பில் போட்டு வாட்டினால்தான் இதற்கு அறிவு வரும்" என்று அடங்காக் கோபத்துடன் கத்தினான்.

உதயசிங்கின் முகத்தில் அதே அலட்சியம் விளையாடியது. "இதற்கெல்லாம் அஞ்சியவன் வீர அன்னையின் புதல்வனல்லன்" என்று சொன்னவாறே தன்னுடைய ஒரு காலை அங்கு எரிந்து கொண்டிருந்த பெரிய நெருப்புச் சட்டிக்குள் திணித்தான்.

ஒரு நிமிடம்... இரண்டு நிமிடங்கள்... ....பத்து நிமிடங்களாயின. அவன் சதை வேக, மாமிசத்தின் துர் நாற்றம் காற்றுடன் கலக்க ஆரம்பித்தது. அவன் முகத்தில் ஒருவித வேதனை உணர்ச்சியும் தென்பட வில்லை. அதே புன்முறுவலும், அனுவசியப் பார்வையும்தான் !

"பட் !"

எலும்பு முறிந்த சப்தம் தான். அப்பொழுதும் அவன் கலங்கவில்லை. "ராஜ புத்திர வீரனுக்கு உயிரைவிட மானமே பெரிது" என்று தன்னால் இயன்ற வரையில் கத்தினான்.

மற்றொரு காலையை எடுத்து நெருப்புச் சட்டியில் வைக்க எத்தனித்தான். ஆனால் சக்திதானில்லை......வெகு நேரம் அவன் உணர்ச்சியுட னிருக்கவில்லை. கீழே சாய்ந்து விட்டான். பெரிய நெருப்புக் கட்டிகள் சிதறி அவன் மேலே விழுந்து கிடந்தன.

கோரியினால், அவன் வீரத்தைக் கண்டு, ஆச்சரியத்தைச் சமாளிக்க முடியவில்லை. என்றாலும் உதயசிங்கின் மேலிருந்த வெறுப்பு மாறவில்லை. அவனுக்கு வேண்டியதை அந்த வாலிபன் சொல்லவில்லையல்லவா ?

"இந்த செத்த நாயை ஆற்றில் விட்டெறியுங்கள்......" என்று அலட்சியமாகச் சொன்னவாறே வெளியே சென்று விட்டான்.

(4)

காட்டாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அலைகள் ஆக்ரோஷத்துடன் வந்து மோதிக் கொண்டிருந்தன. கதிரவன் புறப்படும் சமயமானதால் அந்தகாரத்தின் போர்வை சிறிது விலகி இருந்தது. ஆற்றின் "ஹோ" என்ற சப்தத்தைத் தவிர வேறு ஒரு சப்தமுமில்லை......திடீரென்று ஒரு பழைய மரத்தில் உட்கார்ந்திருந்த ஒரு கோட்டான் அலறிற்று. கோட்டானும் திடீரென்று தன் அழுகுரலை நிறுத்திவிட்டது. மறுபடியும் அதே நிசப்தம்!

பிரிதிவிராஜ் தான் சிறு வயதிலிருந்து வளர்த்து வந்தவனும், தன் ஆப்தநேசனுமான உதயசிங்கின் வரவை எதிர்பார்த்து நின்றுகொண் டிருந்தான். அவன் வரும் நேரமாகியும் கூட அவன் வராததின் காரணம் பிரிதிவிராஜுக்குத் தெரியவில்லை. ஆ ! அதோ ! காட்டாற்றின் நடுவில் ஒரு மனிதவுடல் உருண்டு வருவதைக் கண்டான். இவன் யோசிக்கக்கூட இல்லை. மறு விநாடி அலைகளுக்கு நடுவில் மறைந்தான். மிகவும் கஷ்டமாகத் தானிருந்தது. என்றாலும் பெருமுயற்சியோடு அவ்வுடலுடன் கரை சேர்ந்தான்.

தன் களைப்பையும் பொருட்படுத்தாது தான் காப்பாற்றியது யார் என்று நோக்கினான். அவன் இதயம் திடுக்கிட்டது.

(344-ம் பக்கம் பார்க்க)

காவடி

(சி. சங்கரன்)

குழந்தைகளே! நான் உங்களுக்குக் காவடிகளைப்பற்றி ஒரு சிறு கதை சொல்ல விரும்புகிறேன். நீங்கள் காவடிகள் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நான் உங்களுக்கு இப்பொழுது முதல் முதலில் யார் காவடி ஏற்படுத்தினார்கள். என்பதையும் அதைத் தூக்கிக் கொண்டு ஏன் பழனிக்குப் போகின்றார்கள் என்பதையும் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

நீங்கள் எல்லோரும் 'அகஸ்தியர்' என்று பெயர்கொண்ட ஒரு பெரிய மஹரிஷி இருந்தாரென்று கேள்விப்பட்டிருப்பீர்கள். முன்னொரு காலத்தில், பரமசிவன் அவருக்கு 'சிவா' என்றும் 'சக்தி' என்றும் கைலாச பருவத்தின்மேலிருந்த இரு குன்றுகளை தானமாகக் கொடுத்தார். மேலும் அவைகளை தென்னிந்தியாவுக்கு எடுத்துச்சென்று அவை இரண்டையும் 'பரமசிவனாகவும்', 'பார்வதியாகவும்' பாவித்துப் பூஜை செய்வதற்கும் அனுமதி கொடுத்தார். ஆனால் அகஸ்தியரோ அவற்றை 'பார்ச்சவனம்' என்ற காட்டில் வைத்துவிட்டு தென்னிந்தியாவிற்கு வந்து விட்டார். பிறகு ஒரு சமயம் அவை இரண்டையும் கொண்டுவருவதற்காகப் புறப்படும்போது, இராக்ஷஸர்களுடைய குருவான 'இடும்பன்' அதைத் தான்கொண்டு வந்து அவரிடம் சேர்ப்பதாகக் கேட்டுக்கொண்டான். அதற்கு அகஸ்தியர் சம்மதித்து அதற்காக வேண்டிய சில மந்திரங்களை அவனுக்கு உபதேசம் செய்தார். மேலும் எந்த வழிபோகவேண்டும் என்றும் சொல்லி அனுப்பினார்.

அகஸ்தியர் சொன்ன பிரகாரமே இடும்பன் அந்த காட்டை அடைந்தான். அந்த இரு குன்றுகளுக்கும் அவர் சொன்னபடியே பூஜை செய்தான். கடைசியாக அவனுக்கு இதை எப்படித் தூக்கிச் செல்வது என்பது புரியவில்லை. இப்படி விழித்துக் கொண்டிருக்கையில், இடும்பன் ஒரு குன்றின் மீது பிரம்மாவின் தண்டத்தைப் பார்த்தான். பக்கத்தில் சில பெரிய பாம்புகளையும் பார்த்தான். அவைகளைப் பார்த்தவுடன் அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. இடும்பன் அந்த தடியை ஒரு கம்பு போலவும், பாம்புகளை கயிறுகள் போலவும் உபயோகப் படுத்தி, காவடிபோல்கட்டி அதை தன் தோளின் வலிமையினாலே தூக்கிக்கொண்டு தென்னிந்தியாவை நோக்கிச் சென்றான்.

இப்படிக் கஷ்டப்பட்டுப் போகையில், இடும்பன் பழனியை அடைந்தான். அங்கு அவ்விரு குன்றுகளையும் மேல்பூமியில் வைத்து விட்டுச்

சற்றுநேரம் களைப்பாறினான். பிறகு அவற்றை மறுபடியும் தூக்கிச் செல்வதற்காக அதனிடம்போய் தூக்க முயன்றான். அவனால் தூக்க முடியவில்லை. அவ் விரண்டும் பூமியை விட்டு கிளம்பவே இல்லை. இப்படி மிகவும் ஆச்சரியத்துடன் சுற்றும் முற்றும் விழித்துக் கொண்டு நின்றான். அப்பொழுது சிறு தூரத்தில் கையில் ஒரு கழியை உடய ஒரு சிறு பையனைப் பார்த்தான். அச் சிறுபையன் சுப்பிரமண்யக் கடவுளே தவிர வேறு ஒருவரும் இல்லை. இடும்பன் அப் பையனைப் பார்த்து, "ஏ! பையா! ஏன் இம் மலைகள் பூமியிலிருந்து வர மாட்டேன் என்கின்றன?" என்று வினவினான். அப் பையன் இடும்பனைப்பார்த்து, "அக்குன்றுகள் என்னுடையன" என்று பதிலுரைத்தான். "உன்னுடையதா", என்று கர்ஜித்துக் கொண்டே அப்பையனை அடிப்பதற்குக் கிளம்பினான். இருவரும் சண்டை செய்தார்கள். அதில் இடும்பன் மூர்ச்சை அடைந்தவனாய்க் கீழே விழுந்தான். இதைக் கேட்டு இடும்பன் மனைவி அங்கு ஓடி வந்து தன் நாதனுக்கு உயிரைக் கொடுக்கும்படி பையன் வடிவத்தில் வந்த முருகக்கடவுளைப் பிரார்த்தித்தாள். உடனே சுப்பிரமணியர் இடும்பனுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தார். இடும்பன் எழுந்திருந்து அவர் பாதங்களில் விழுந்து, "ஓ! கடவுளே! தாங்கள் என்னை உங்களுடைய துவார பாலகனாக நியமித்துக் கொள்ள வேண்டும். மேலும் எவரேனும் காவடிகளைத் தூக்கிக்கொண்டு வந்து தங்களைப் பிரார்த்தனை செய்தாலும் அவர்களைத் தாங்கள் காப்பாற்றவேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். அவ்வாறே சுப்பிரமணியக் கடவுள் அவனுக்கு அவ்விரு வரங்களையும் கொடுத்தார்.

அதிலிருந்துதான் பழனிமலையில் சுப்பிரமணியருக்காக ஒரு கோவில் கட்டப்பட்டது. இன்னும் அக் கோவில் வாயிற்படியில் துவாரபாலகர்கள் இருக்கிறார்கள். அது முதற் கொண்டுதான் எந்த எந்த ஜனங்கள் கஷ்டத்தினால் வாட்டப்படுகிறார்களோ அவர்கள் காவடியைத் தூக்கிக்கொண்டு சுப்பிரமணியக் கடவுளைத் தரிசனம்செய்துவருகிறார்கள். அநேகமாகப் பெரும் பாலோர் காவடி எடுத்துக்கொண்டு ஒவ்வொரு வருஷமும் பழனிக்குப் போகிறார்கள்.

(342-ம் பக்கத் தொடர்ச்சி)

கூர்ந்து பார்த்தான். ஆம், அதே நேசன் உதயசிங்தான்! எண்ண முடியாதபடி கத்திக் குத்துகளிருந்தன. உடம்பு எங்கும் தடிப்புகள். ஒரு கால் முழங்கால் வரையில் பொசுங்கிக் காணப்பட்டது. ஆனால் முகத்திலிருந்த சோபையும், வீரமும், ராஜ விசுவாசமும் மறையவில்லை. வதனம் நிர்மலமாக இருந்தது.

(5)

பிரிதிவிராஜ் உதயசிங்கின் சவத்தைத் தூக்கிச் சென்றான். அவன் உள்ளம் எவ்வளவோ குமுறியது. தன் முன்னோர்களை அடக்கம் செய்த இடத்தில் தன் நேசனையும் அடக்கம் செய்தான். "சித்திரவதை செய்யப்பட்டு, கொல்லப்பட்டிருக்கின்றான். அதன் காரணம் எனக்குத் தெரியும்" என்று அவன் உலர்ந்த உதடுகள் முணு முணுத்தன. என்றும் கண்ணீர் விட்டறியாத அவன் குமுத விழிகள் தன் நேசனின் பிரிவைத் தாங்காமல் இரு முத்துக்களை உதிர்த்தன.

கதிரவன் எப்பொழுதும் போலத்தான் அன்றும் புறப்பட்டான்.